புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது

உ
சிவமயம்

விரோதிஸு (1889) ஆவணிமீ உஅ௳ ஆரம்பமானது

# இந்துசாதனம்

(Supplement to the Hindu Organ)

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

பத்திரக்கிரயம்.

வருஷம் ஒன்றக்கு

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப்பட்டினம் | ரூ | 5 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 9 00 |
| இலங்கை இந்தியா | ரூ | 8 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 12 00 |
| தொடுவாய்ப்பகுதி | ரூ | 9 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 13 00 |
| தனிப்பிரதி | சதம் | 05 |

முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே."
—அப்பர் சுவாமிகள்

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு

| | | |
|---|---|---|
| ,, | ஒரு கலம் | ரூ. 10 00 |
| ,, | அரைக் கலம் | ரூ. 5 50 |
| ,, | கால் கலம் | ரூ. 4 00 |
| ,, | ஒரு அங்குலம் | ரூ. 1 00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி.

காலம் கீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

புத்தகம்—சகூ } யாழ்ப்பாணம்:—ஈசுவரஸு ஐப்பசிமீ உ௲௨ ( 1937 நவம்பர் 8 ) திங்கட்கிழமை { இலக்கம்—௫௭

## பாலருவக்கப் பயிற்று மாசிரியர்

(K. T. ஞானப்பிரகாசம், மட்டக்களப்பு)

பாலரைப் பத்துமாதஞ் சுமந்து பயந்தவள் பெண்; பாலூட்டி வளர்த்தவள் பெண்; 'ஆணிப்பொற் றொட்டிலிட் டருமருந்தே கண்வளராய்' என அடிக்கடி ஆலிங்கனஞ் செய்து சீராட்டிச் சிறு துயில் கொள்ளச் செய்தவள் பெண்; பிள்ளை புரிந்த இடுக்கண்களைப் பொருட்படுத்தாது அகழ்வாரைத் தாங்கும் பூமிதேவி போற் பொறுத்தவள் பெண்; பிள்ளையின் சுகம் விரும்பி உணவாலுண்டி ஒறுத்தவள் பெண்; சிறந்த அன்பு பூண்டவள் பெண்: சீவகாருண்ணியம் நிறைந்தவள்பெண்; சுருங்கச் சொன்னுல் பிள்ளையினருமைபெருமை யாவும் ஒருங்கமைய அறிந்தவள் பெண்; இன்னும் பிள்ளையால் விருப்பப்பட்டுப் பேரன்பு செலுத்தப்படுபவளும் பெண்ணேயாவள்.

"மதலையைப் பெறுநாட் துன்பம்;
வளர்த்திடு நாளுந் துன்பம்;
விதலைநோ யடையிற் றுன்பம்;
வியன் பருவத்துந் துன்பம்"

எனு மான்றோர் சான்றுக்கிணங்கப், பிள்ளையைப் பெற்றெடுத்த நாட்தொட்டு என்றைக்குந் துன்பம் அநுபவிப்பவளும், சிறரின் நூதனவிருப்பு, நுண்ணிய வாராய்வு, பிறரைக்கண்டு பாவிக்குஞ் சக்தி, வெல்ல வேண்டுமென்ற விருப்பு, சுயாதீன வாஞ்சை, சுறுசுறுப்பிற் பிரீதி, இரச ஞானப் பயிற்சி என்பனவும், இன்னோன்ன பிறவுமான இயற்கை உணர்ச்சிகளை ஆராய்ந்தறிந்து அவர்க்கேற்க அநுகூலமாய்க் குறைவற முறையுறப் படிப்பிக்கத்தக்க பண்பு வாய்ந்தவளாய் உள்ளவளும் பயிற்றப்பட்ட ஆசிரியையே யென்க. ஆனல், பயிற்றப்பட்ட பாவையர் மாத்திரமே பாலரைப் படிப்பிக்க உகந்தவரென்பதை யான் வற்புறுத்த முற்பட்டனவல்ல; கல்லனுபவமும், "அறிவுமடக்கமும் அன்புறு சாந்த அகக்குணமும்" பொருந்திய நற்சுவை மெச்சும் பெற்றியின் மிக்க நல்லாசிரியன் எயின், நம்மிளஞ் சிறரை ஒப்படைப்பதே நனிபெரும் பயன் நல்குவதாகும். பயிற்றப்பட்டுச் சித்தியெய்திய ஆசிரியராயிருந்தாலும் 'குட்டியாடு கொழுத்தாலும் வழுவழுப்புப் போகாது' என்பதற்கேற்கச் சிலசமயம் அவ்வளவு அறிவாற்றல் அநுபவம் பெற்றிருக்கவும் மாட்டார். அன்றியும் 'இளங்கன்று பயமறியா' தென்பதும், 'இளமை எஞ்ஞான்றும் இழுக்குடைத்து' என்பதுமெம் ஆன்றோர் வாக்குகளாகும்; எனவே அநுபவ ஞானங் கைவரப்பெறுத இளமாசிரியர்பால் சின்னஞ் சிறு பாலரை ஒப்படைப்பது நற்பயன் நல்கா வென்பதும் வெள்ளிடைவெற்பாகும்.

பாலருவக்கப் படிப்பிக்கும் ஆசிரியன் அல்லது ஆசிரியை தோற்றத்திற் பொலிவுடையவராயும், வாக்கு வல்லபம் வாய்ந்தவராயுமிருத்தல் வேண்டும். 'கடுகு சிறிதெனினும் காரம் பெரிது' "உருவுகண்டெள்ளாமை வேண்டும்" என்பனவான பழமொழிகள், முதுமொழிகளுண்டெனினும் இளஞ்சிறர்மாட்டவை பொருந்தாவாதலான் அன்னவர்களின் கண்கவர்ச்சிக் குரயராய தோற்றத்திற் பொலிவுடைய ஆசிரியரே ஏற்றவரென்க. இன்னுஞ் சிறுவரைப் படிப்பிக்கு மாசிரியர், விளித விளையாட்டுக்கள், சங்கீதம், அபிநயம், ஓவியம் முதலானவற்றில் ஒன்றிலேனுமுச்சமான விசேட திறமைகள் பெற்றவராயுமிருத்தல் வேண்டும். எனெனில், எண், எழுத்து என்பனவற்றிலும் பார்க்க மேற்கூறியவற்றிலேயே சிறர் சிந்தை தீவிரமாகச் செல்லக்கூடுமாதலினலும், முற்கூறியவைகளைக் கொண்டு பிற்கூறிய எண் எழுத்து என்பனவற்றையும் முறையே கற்பிக்க இயலுமாதலினலுமென்க.

இளஞ் சிறரின் உள்ளம், எவ்வித மான வியத்தையும் சித்தரிந்தற்குகந்த வெள்ளைக் காகிதம் போன்றும், எவ்விதமான உருவங்களாக்குவதற்குவசையுந் தன்மை வாய்ந்த இளகிய மெழுகு போன்றும், விரும்பிய பொருட்களை வேண்டியமட்டும் நிரப்பத்தக்க வெறுமையான பாத்திரம் போன்றிருத்தல் மாத்திரமன்று, சிறிய முறையாகச் செப்பனிட்டு என்னவிதமான பயிர்களையும் இனிது முளைக்கச் செய்வதற்கேற்ற விதைக்கத் தொடங்காத விளைநிலம் போன்றுமமைந்திருக்கின்றது. கன்னீர்ப் பாத்திரத்துள்ள நீரை இன்னோர் பாத்திரத்துட் பெய்து நிரப்புவதுபோல, ஆசிரியன் தன்னிடத்துள்ள வறிவை மாணவர் மனத்துட் செலுத்திவிடலாமென்னும் மடக்கொள்கையை அறவே ஒழித்து, மனேதத்துவ சாஸ்திர மூலம் அன்னர் உணர்ச்சிகளை ஆய்ந்தறிந்து, அதற்கேற்ற முறைபாய்க் கற்பிப்பதுதான் அநுகூலம் பயக்கும் என்பது கையுறு நெல்லிக்கனி போல் விளங்கக் கிடக்கின்றது.

இன்னும் பாலரைப் பயிற்றுமாசிரியர், தண்முகமும், இன்சொல்லுந் தாங்கி, உருவை விட்டகலா நிழலைப்போல் ஒருங்கமையப் பெற்றவராயிருத்தல் வேண்டும். சுரும்பூத மலர் அரும்பி மலர்வது போன்று, ஆசிரியரது முகமலர்ச்சியும், இன்சொலுமறிந்த இளஞ் சிறரது முகம் (மனம் மலர மலரும் மலர் போல) மலர்கின்றது. முகம் மலரவே, மலரிலிருந்து தேன் சொரிவது போன்று, சிறருந்தம் மழலை மொழிகளை இயம்பி அன்பாகிய தேனை ஒழுக்குகின்றனர். "அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்" என்பது ஆன்றோர் வாக்கன்றே. அன்பானது இவ்வவழியை அடிப்படுத்தும்; வன்புடையார் நெஞ்சைப் பொடிப்படுத்தும்; குருவின் சிந்தையைத் திடப்படுத்தும். இவ்வுண்மையைக் கருதியே ஆன்றோரும்,

"இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே"

யெனக் கூறியிருக்கின்றனர்.

"இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டி வாய்மை யெருவிட்டு
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"

என்பதும் மேற்சுட்டிய வுண்மையைத் தெளிவாகப் புலப்படுத்தும். அன்பு அச்சத்தை அகற்றி அறிவை வளர்க்கும். அன்பாகிய நீர் பெய்து

### திருநள்ளாறு—
### திருத்தாண்டகம்

இறவாமே வரம்பெற்றே னென்றுமிக்க
விராவணனை இருபதுதோ ணெரியவூன்றி
உறவாகி யின்னிசைகேட் டிரங்கி மீண்டே
யுற்றபிணி தவிர்த்தருள வல்லான்றன்னை
மறவாதார் மனத்தென்று மன்னினனை
மாமதிய மலர்க்கொன்றை வன்னிமத்தம்
நறவார்செஞ் சடையானை நள்ளாற்றானை
நானடியே நினைக்கப்பெற் றுய்ந்தவாறே.

—அப்பர் சுவாமிகள்

அனவரதமும் வளர்க்கப்படும் இளம்பயிர், அறிவாகிய குருத்தீன்று, வானுற வோங்கி வளரும். ஆயின் ஆசிரியருள் ஒரு சாரார்,

"ஐந்து வயதாகுமட்டும் ஆதரவாய்ப் பேணுகவீ
ரைந்து வயதன்பின் ஆகுமட்டும்—மைந்தர்களைக்
கண்டிக்க ஈரெட்டுக் காணுமே மித்திரன் போற்
கொண்டிடுக வேண்டாங் குறை."

என்னும் சாணக்கிய நீதியைத் தலைமேற் றாங்கி இளைஞர் உளத்தியல்பு இன்னதென்பதை ஆராய்ந்திலராய் 'அடியாத மாடு பணியாது' 'அடியாத பிள்ளை படியாது' 'கல்வி யென்னும் பயிருக்குக் கண்ணி' ரென்னும் மழை வேண்டும்' எனும் பழமொழிகளைக் கடைப்பிடித்து,

"பாலப்பருவப் பராமரிப்புப்பிற்
காலத்துக் கேற்ற திறவுகோலாம்"

என்பதை மறந்து, கோபமுகங்காட்டிக் கொடுஞ் சொற்கள் கூறி அன்னர் குதூகலம் ஒருவவும், ஆகுலம் மருவவுஞ் செய்து துன்பசாகரத்துள் ஆழ்த்துகின்றனர். இன்னும், என்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## 'இருபெரும் நிதிகள்'

(இ. பிச்சாண்டி)

(முற்றொடர்)

இவற்றைபுணர்ந்தே பெரியாராகிய இயேசு 'ஒருவன் உலக முழுதையும் பெற்றுந் தன்னையே யிழந்துவிடுவானயின் அதனல் பெறும் ஊதியம் யாது' என்றனர். மதிப்புக்குரிய மூகமது நபி 'ஒருவனது உண்மைச் செல்வம் அவன் இவ்வுலகிற் செய்யும் நன்மைகளே; அவன் இறந்தவுடன் மண்ணவர் யாது பருப்பொருளை வைத்துவிட்டுப் போனனென்றுத் தேடுவர். ஆனல் விண்ணவரோ என்ன நன்மைகளைச் செய்திருக்கிறனென வினவுவர்' என்று கூறினர். மதிமிக்க மன்னவராய சாலமன் என்பவர் 'உலகிலே ஒன்றுமில்லாத செல்வர்களும், செல்வர்களாகிக்கொண்டுவரும் ஏழைகளுமிருக்கிறர்கள்' என்று விளக்கியுள்ளார். ஒரு பெரியார் தமது மகனுக்கு மதிகூறுங்கால் 'மகனே, ஏழையை யொருகாலும் மணந்துகொள்ளாதே. உலகிலே மிகுந்த ஏழை யாரெனில் வேறென்றுமின்றிப் பொருட்செல்வம் மாத்திரமுடையவரெனவறிந்துகொள்' என்றனர். வேறொருவர் 'என் மகள் பணமில்லாத மகனை மணக்க உடன்பட்டாலும், மகனில்லாத பணத்தை மணக்க ஒருநாளும் ஒருப்படேன்' என்கின்றனர். இவ்வாறு எத்தனை பேர் மணம் பேசுகின்றனர்?

ஒரு விருந்துக்கு ஓரறிவாளர் வந்திருந்தார்; ஒரு செல்வனும் வந்திருந்தான். பணக்காரன் செருக்குள்ளவனுதலின் அறிவாளி அவனுடன் பேசாதிருந்தனர். அதனல் மனம் புழுங்கிய செல்வன் அவர்பாலணுகி 'நான் கோடீஸ்வரனென்பதை யறிந்தும் நீர் ஏன் என்னுடன் பேசவில்லை' என வினவ, அறிவாளி 'உனதுபெறுமதி அவ்வளவுதானென்று எனக்குத் தெரியும்' எனச் சாவதானமாகப் பதிலளித்தனராம்.

இத்தகைய பெரியாருளொருவர் ஒரு இறப்பு ஏற்பாட்டுப் பத்திரம் எழுதி வைத்துள்ளார். அதன் சுருக்கமாவது:

"அறிவிலிபாகிய யான் மன அன்போடு எனது உரிமையைப் பங்கிடும் விதமாவது: (எனது பருப்பொருள் சொற்பமாதலின் அவற்றை விடுத்து மற்றவைபைப் பங்கிடுகிறேன்.) முதலாவதாகப் பாலர்களுக்குச் செல்லப் பெயர்களையும், புகழ்ச் சொற்களையுமளிக்கும்படி பெற்றோரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இரண்டாவதாகப் பிள்ளைகளுக்கு அப்பருவத்தில் மாத்திரம் பயன்படக்கூடியசிறுபறை, மண், தூசு என்பவைகளை அவர்கள் விரும்பியவண்ணம் கோட்டைகட்டிச் சமைத்துண்ணக் கொடுக்கிறேன். மூன்றாவதாகச் சிறுவர்களுக்கு எல்லாத் தரிசு நிலங்களையும் விளையாடும் படிக்கும், நீர் நிலயங்களை நீந்திக் குதிக்கும்படிக்கும், உலகின் பற்பல காட்சிகளைக் கண்டு இன்புறும் படிக்குங் கொடுக்கிறேன். நாலாவதாக இளைஞருக்கு உயர்வள்ளலையுண்ணும் ஆற்றலையும், தம் பலத்தில் நம்பியிருக்கும் சக்தியையுங் கொடுக்கிறேன். ஐந்தாவதாகக் காதலருக்கு அவர் இன்புற்றிருக்க எல்லாப் பொருள்களையுங் கொடுக்கிறேன். ஆருவதாக முதியோருக்குப் பழைய ஞாபகத்தையும் பல நூல்களையுங் கொடுக்கிறேன். கடைசியில் வெள்ளிக்குடுமி நண்பர்களுக்கு மூப்பின் நலத்தையும், மக்கள் போரது அன்பையுங் கொடுக்கிறேன்" என்பது. இவ்வேற்பாட்டிலிருந்தே உண்மைச் செல்வம் எதுவென்பதும், அது எதனைப் பொறுத்ததென்பதும் விளங்குகின்றன.

பொதுவாகக் கூறுமிடத்துக் கல்வியின் பெருமை சொல்லக்கூடாததாகவிருக்கிறது. ஒளிக்கும் இருளுக்கும், சத்தத்துக்கும் அசுத்தத்துக்கும், புண்ணியத்துக்கும் பாவத்துக்குமிடையில் எவ்வளவு பேதமுண்டோ அவ்வளவு பேதம் கல்விப் பொருளுக்குஞ் செல்வப் பொருளுக்குமிடையி லிருக்கின்றது; செல்வம் புத்தியைக் கெடுக்கும்; கல்வி புத்தியைக் கொடுக்கும். செல்வம் கொடுக்கக் கொடுக்கக் குறையும்; கல்வி கொடுக்கக் கொடுக்க நிறையும்; செல்வம் சிலகாலில் நாஸ்தியாகும்; கல்வி யழியாத ஆஸ்தியாகும்; செல்வம் திருடர்களால் அபகரிக்கப்படும்; கல்வி யாவராலும் உபகரிக்கப்படும்; செல்வம் நம்மைத் துஷ்டர் கையில் ஒப்புவிக்கும்; கல்வி நம்மை ஆபத்திலிருந்துத் தப்புவிக்கும்; செல்வம் காமாதிகளையுண்டாக்கும்; கல்வி காமாதிகளை நாசமாக்கும். செல்வர்களுடைய பேர் அன்னியதேசங்களில் அப்பிரசித்தம்; கல்விமான்களுடைய பேர் ஜகத் பிரசித்தம். கல்வியே தனம்; கல்வியேகனம்; அழகில்லார்க்குக் கல்வியே யழகு; ஆபரணமில்லார்க்குக் கல்வியே பூஷணம்; பலமில்லார்க்குக் கல்வியே பலம்; துக்கமுள்ளார்க்குக் கல்வியே சுகம்; தரித்திரர்களுக்குக் கல்வியே பாக்கியம்; ஆபத்துவேளையிற் கல்வியே கவசம்; கல்வியே நினைத்ததெல்லாந் தருஞ் சிந்தாமணி.

இவ்விரு பெரும் நிதிகளாகிய கல்விப்பொருள், செல்வப்பொருள் இரண்டும் எக்காரணத்தாலோ முரண்பாடடைந்தாகின்றன. கல்விமான்கள் தரித்திரராக விருக்கிறர்கள். செல்வர்கள் மூடர்களாக விருக்கிறர்கள். விஷ்ணுவினது பத்தினியாகிய இலக்குமி செல்வதேவதையெனவும் விஷ்ணுவின் புத்திரராகிய பிரமாவின் தேவி கல்விக்கு அதிதேவதையென்றுஞ் சொல்லுவார்கள். உலகிலே மாமிக்கும் மருமகளுக்கும் பகையே காணப்படுகிறது. அதைப் போல மாமியாகிய இலக்குமியும், மருமகளாகிய சரஸ்வதியும் ஒருவருக்கொருவர் பகை சாதிக்கிறர்கள் போலும். உலகத்தில் மாமிக்கும் மருமகளுக்கும் ஒரு சில சமயத்தானும் ஒற்றுமை யேற்படுவதில்லையோ வெனின் இருநிதியுங் கைவந்த அதிவீரராமபாண்டியர் முதலியவரை நினைந்து நாம் சமாதானப்பட்டுக் கொள்ள வேண்டுமே தவிர வேறு செய்யவேண்டியதுளன்?

பாலர்பகுதி.

# மாக்பெத்

[ சுப்புமாமா எழுதியது ]

டங்கன்-டி-மீக் என்பான் ஸ்கொற்லண்ட் மன்னனாய்ச் செங்கோலோச்சிய காலத்தில், மாக்பெத் என்னும் பெயருள்ள பெருங் கனவான் ஒருவன் இருந்தான். இந்த மாக்பெத் மேற்படி மன்னனுக்கு நெருங்கிய சுற்றத்தவன்; அன்றியும், வீரத்திலும் யுத்தங்களை நடத்தும் தீரத்திலும் புகழ் பெற்றவன். பெருந்தொகையான நோர்வேத் துருப்புக்களின் உதவி கொண்டு போராற்றிய ஓர் எதிர்ச் சேனையைத் தோல்வியடையச் செய்தவன்.

இந்தப் பெரிய யுத்தத்தினின்றும் வெற்றியோடு மீண்ட மாக்பெத், பாங்கோ என்னும் ஸ்கொற்லாந்து வீரர் இருவரும் வரும் வழியில், ஒரு புதருக்கருகாமையில் நூதனமான மூன்று உருவங்களால் வழி மறிக்கப்பட்டனர். இம்மூன்று உருவங்களும் மோவாய்களில் தாடிகளை உடையனவாக இருந்தனவேயாயினும் மாதர் தோற்றத்தையே உடையனவாக இருந்தன. அன்றியும், அவற்றின் திரைந்த தோல்களும் கோர உடைகளும் அவை இவ்வுலகப் பிராணிகளல்லவென்பதைக் காட்டி நின்றன. மாக்பெத் முதலில் அவற்றை நோக்கிப் பேச ஆரம்பித்தான். அதைக் கண்ட அக்கிழமோகினிகள் அவ்வாறு பேசியதற்கு அதிருப்தியடைந்தவைபோலக் காட்டி ஒவ்வொன்றும் தனது திரைந்த உதடுகளில் விரலை வைத்து அமைதியாக நின்றன. அதன்பின், அம்மூன்று மோகினிகளுள்ளும் முதலாவது மோகினி மாக்பெத்தை நோக்கி, "கிளெமிஸின் பிரபுவே!" என்று விளித்தது. இம்மோகினி தன்னை அறிந்து கூறுகின்றது என்றமை பற்றி மாக்பெத் எவ்வித ஆச்சரியமுமடையவில்லை. ஆயின், இரண்டாவது மோகினியும் மாக்பெத்தை நோக்கி, "கௌடோரின் பிரபுவே!" என்று கூறித் தலையைத் தாழ்த்தி மரியாதை பண்ணிற்று. மூன்றாவது மோகினியோ "எதிர்காலத்தில் மன்னனாக இருப்பவனே! வந்திக்கிறேன்" என்று வசனித்தது. இவ்வார்த்தைகள் மாக்பெத்துக்கு ஓரளவுக்கு அதிசயத்தை விளைத்தன. ஏனெனில், மன்னனது புதல்வர் உயிரோடிருக்கும்போது, மாக்பெத் மன்னனாவதற்கு எதிர்பார்த்திருக்க முடியாதன்றோ? அதன்பின், அம்மோகினிகள் பாங்கோவின் பக்கமாகத் திரும்பி, இரட்டுற மொழிதலாக, "நீர் மாக்பெத்தினும்பார்க்கக் குறைந்தவர்; எனினும் அவரினும் கூடியவர். மாக்பெத்தைக் காட்டிலும் சந்தோஷங் குறைந்தவர்; எனினும் அவரினும் அதிகமான சந்தோஷமுடையவர்" என்று கூறின. அன்றியும், பாங்கோ அரசனாக இருந்து ஆட்சி புரியாவிடினும், பாங்கோவின் புதல்வர் ஸ்கொற்லாந்துக்கு அரசராவர் என்று தீர்க்கதரிசனங் கூறின. இவ்வளவில் அவை அந்தர்த்தானமாயின. இதனால் அவை பைசாச மோகினிகளாம் என்பதை மாக்பெத்தும் பாங்கோவுந் தெரிந்து கொண்டனர்.

இவ்வாறே அச்சம்பவத்தின் புதுமையை நினைத்த வண்ணமாக அவர்கள் நிற்கும்போது அரசனிடமிருந்து சில தூதுவர் வந்து அரசன் மாக்பெத்துக்கு "கௌடோர்ப் பிரபு" என்னும் பட்டத்தை அளிக்க ஆஞ்ஞாபித்ததாகத் தெரிவித்தனர். இந்நிகழ்ச்சி மோகினிகள் சொன்ன வார்த்தைகளை உடனேயே மிக்க அதிசயகரமான முறையில் உண்மைப்படுத்த, மாக்பெத் அதிசயத்தில் மூழ்கினவனாய் நின்றான். அதனால், வந்த தூதுவருக்கே அவன் பதில் கூறமுடியாமல் திகைத்து நிற்கலானான். அச்சமயத்தில், மூன்றாவது மோகினி கூறிய தீர்க்கதரிசனமும் இவ்வாறே நிறைவேறுதல் கூடுமென்றும், ஒரு காலத்தில் தான் அரியாசனத்தமர்ந்து ஆட்சி புரியலாமென்றும் தன்னுள் நம்பிக்கை மீதூரப் பெற்றான்.

பின் பாங்கோவைத் திரும்பிப் பார்த்து, "உனது புதல்வர் ஒரு காலத்தில் அரசராவர் என்று அம்மோகினிகள் கூறினவல்லவோ? அவை எனக்குக் கூறிய தீர்க்கதரிசனம் எவ்வளவு விரைவாக நிறைவேறிற்று என்று பார்த்தாயா? இதைக் கண்ட பின்னரேனும், அவை உனக்குக் கூறிய வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கின்றாயா?" என்றான். "அவ்வாறு நம்புதல், சிங்காசனத்தைப் பெறவேண்டும் என்னும் ஆசையைத் தூண்டிவிடக் கூடும். பெரும்பாலும் இந்தப் பைசாச மோகினிகள் பெருந் தீங்கு விளைக்குங் காரியங்களில் எம்மை விழுத்துவதற்காகச் சிறு காரியங்களில் உண்மையான பலனைக் கூறி எம்மை ஏமாற்றுகின்றன" என்று பாங்கோ பதிலிறுத்தான்.

ஆயின் மோகினிகள் கூறிய தீய தூண்டுதல்மொழிகள் மாக்பெத்தின் மனத்தில் வேரூன்றலாயின. அதனால், அவன் நற்குணம் வாய்ந்த பாங்கோவின் எச்சரிக்கையுரைகளையும் பொருட்படுத்தினானில்லை. அக்காலந்தொட்டு ஸ்கொற்லாந்துச் சிங்காசனத்தை எவ்வாறு கவரலாம் என்பதிலேயே அவனது எண்ணங்கள் சென்றன. (வரும்)

# நீருற்றின் விசித்திரம்

—— :o: ——

### பனுமரகாட்டின் மத்தியில் உள்நாட்டு மந்திரி கண்ட கவின்பெறு காட்சி

### ஸ்தல ஐதிகம்.

### யானைகளின் சத்தத்தைக் கேட்டு ஜலத்தைக் கொப்புளிக்கும் இரகசியம் யாது?

பனுமரகாட்டின் மத்தியில் மிக மிக விசித்திரமான நீரூற்று ஒன்று இருக்கிறது. யானைகள் பிளிறும் சத்தத்திற்கு அந்த நீரூற்றிலிருந்து கொதிக்கும் தண்ணீரைப் போன்று குமுழி குமுழியாகக் கொப்புளிக்கிறது.

இதையொட்டி ஒரு விசித்திரமான கதை இருக்கவேண்டுமென்பது உள்நாட்டு மந்திரி மேஸர். பரன் ஜெயத்திலகாவின் நம்பிக்கை.

இந்த இடத்தில் யானை தண்ணீர் அருந்தாதென்பதும், ஆனால் அவை வணக்கம் செய்வதுபோல் ஆங்கு வந்து பிளிறிக்கொண்டு அந்த ஓடையின் கீழ்ப்பக்கமிருந்தே தாகவிடாய் தீர்த்துவிட்டுச் செல்லுமென்பதும் ஸ்தல ஐதிகம்.

இது ஒரு புனிதமான இடமென்பதும் கிராமவாசிகளின் நம்பிக்கை.

தவிரவும், மனிதர்களுங்கூட மிருக சத்தமிடும்பொழுது, அந்த நீரூற்றிலிருந்து தண்ணீர் கொப்புளிக்கிறதாக ஸ்தல கிராமவாசிகளும் சொல்லுகிறார்கள்.

### மந்திரி நேரிற் கண்ட காட்சி

மேஸர். பரன் ஜெயத்திலகாவை ஒரு பத்திரிகை நிருபர் பேட்டி கண்டார். அப்பொழுது அவர் சொன்னதாவது: "கடந்தவாரம் நான் அந்தவிடத்திற்குப் போயிருந்தேன். என்கூட வந்தவர்கள் பலத்த சப்தமிடவும் அந்த நீரூற்றுக் கொப்புளிக்க ஆரம்பித்ததை நான் நேரிற் கண்டேன்.

"ஸ்தலத்தில் யானைகள் சத்தமிடுவதை நான் உண்மையிற் பார்க்கவில்லை. அவ்விதமான காட்சியை நான் ஒருபொழுதும் பார்க்கக் கொடுத்துவைக்காதவனாக இருக்கலாம். ஆனால் ஸ்தலத்தில் யானைகள் வந்து சத்தமிடும்பொழுது நீரூற்றிலிருந்து தண்ணீர் கொப்புளிக்காதென்று கூற முடியாது.

"இந்தச் சமாச்சாரம் மிக விசித்திரமாக விருக்கிறது. ஆனால் இதற்கு எத்தகைய வியாக்யானமும் அளிக்கப்படக் கூடுமென்று எனக்குத் தெரியவில்லை ஒருவேளை இதற்குத் தாத்பரியம் கூறும் அலுவலைச் சில விஞ்ஞானிகள் மேற்கொள்ளக்கூடும்.

"சிங்களக் கலைகளில் இந்த விசித்திர-நீரூற்றைப்பற்றி எங்கும் கூறப்பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை அல்லது இவ்விதம் இதற்குமுன் கேள்விப்பட்டதும் கிடையாது."

## பாங்க்ஸ்-ஜெயத்திலகா பிரச்னை

### தேசாதிபதியின் முடிவு இவ்வாரம் தெரியலாம்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனறல் மிஸ்டர் பாங்ஸ் விஷயத்தின்மீது தேசாதிபதிக்கும் மந்திரிகளுக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தைகளின் முடிவு இந்த வாரத்தில் அறிவிக்கப்படுமெனத் தெரிகிறது.

தேசாதிபதிக்கும் மந்திரிகளுக்குமிடையே இவ் விஷயத்தைப் பற்றித் திங்கட்கிழமை பிற்பகலில் நடைபெற்ற மகாநாட்டின் பிறகு இரண்டொரு தினங்களில் அவ்விஷயத்தின் முடிவை மந்திரிகளுக்கு உரைப்பதாகத் தேசாதிபதி கூறினார்.

அவ்விஷயத்தை விட்டுவிடக்கூடாதென்பது மந்திரிகளின் நோக்கம். ஆனால், அவ்விஷயத்தை விட்டுவிடுவதே தேசாதிபதியின் விருப்பமாகும்.

தேசாதிபதியினுடைய முடிவு தெரியும் வரையில் பிற்றஸ்டேடிலவிஷயத்தை முற்றிலும் விசாரிப்பதற்காக அரசாங்கசபையால் ஒரு விசேஷக் கமிட்டி நியமிக்கும் விஷயம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தேசாதிபதியின் முடிவு மந்திரிகளுக்குத்திருப்திகரமாக இல்லாதிருக்குமாகில் அவர்கள் விசேஷக் கமிட்டி நியமிக்கும் பிரேரணையைக் கொண்டு வருவார்கள்.

### ஸ்ரீமதி சரோஜினிக்கு சுகவீனம்

கல்கத்தா நவ 2—

ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவுக்கு நல்ல சௌக்கியமாயில்லை. சிகிச்சைக்காகச் சில தினங்கள் அவர் கல்கத்தாவிலிருக்க வேண்டுமென டக்டர்கள் ஆலோசனை கூறுகிறார்கள்.

# கந்தபுராணக் கவிநுட்பம்

## மேருப்படலம்

(வித்துவ சிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளையவர்கள்வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள். இப் [] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.)

இருந்திட விரிஞ்சன் மாயோ னிருவரு மீசன் றன்பாற்
பொருந்திடு முணர்ச்சி கொண்டு முத்தியிற் புக்க சேயுந்
திருந்துசீர் வசிட்டன் சொல்லாற் சிலையெனப் பன்னாணின்ற
வருந்ததி மாதும் போன்று ராடவர் மகளிரெல்லாம்

பிரம விஷ்ணுக்களாகிய இருவருமிருப்பவும், அவர்களைத் தெய்வமெனச் சிந்தியாது பரமபதியாகிய சிவபிரானிடத்தே ஞானவுணர்ச்சி வைத்து மோக்ஷத்திற் சேர்ந்த சுகப்பிரமரிஷியையும், திருந்திய சிறப்பையுடையவசிட்ட முனிவரின் கட்டளையினாலே கல்லைப்போல் அசைவறப் பலகாலம் நின்ற அருந்ததியென்னும் பெண்ணையும் ஒத்தனர் ஆண்கள்பெண்களாகிய இருபாலாருமென்பது பொருள்.

ஆடவரெல்லாரும் சுகப்பிரம விருடியையும் மகளிரெல்லாரும் அருந்ததியையுமொத்தனரென்க. பூர்வஞானத்துடன் பிறந்து இல்லறத்திற் புகுதலின்றி நித்திய பிரமசாரியாக விருந்தமையின் சுகப்பிரம முனிவரையும், தன்பதியாகிய வசிட்டமுனிவர் சொற்படி இச்சையின்றிப் பலகாலம் கல்லாயமைந்து நின்றமையின அருந்ததியையும் முறையே ஆடவர்க்கும் மகளிருக்கும் ஒப்பாகக் கூறினர்.

[விரிஞ்சன் மாயோன் இருவரும் இருந்திட - பிரம விஷ்ணுக்களிருவரும் சத்திகள் சமேதராயிருப்ப; இனி, பிரம விஷ்ணுக்களிருவரும் ஒவ்வொர் சமயவாதிகளினால் தம்தம் கடவுளெனக் கொள்ளப்பட, அவர்களைப் பசுக்களென விடுத்துப் பரமசிவனொருவரே பரம்பொருளெனக் கொண்டு அவரிடத்துப் பத்தி வைத்து முத்திதனையடைந்த மார்க்கண்டேயப் பிள்ளையாரும் என்றலுமொன்று] (உ௬)

"ஏமரு புவனமுன்னு மினிதருள் கமலக்கண்ணர்
பூமட மாதர் தம்பாற் புணர்கிலர்........."

இங்கே கமலக் கண்ணர் பூமடமாதர் என்பன இரட்டுற மொழிதல் என்னும் உத்தியின் பாற்படும். கமலக் கண்ணர் - அரிபிரமர்; செந்தாமரைப் பூப்போன்ற கண்களையுடைமையின் அரியையும், செந்தாமரைப் பூவின்கண்ணே யிருத்தலின் பிரமாவையுங் குறித்தது; பூமடமாதரென்றது செந்தாமரை மலரிலிருக்கும் இலக்குமியையும் வெண்டாமரை மலரிலிருக்குஞ் சரசுவதியையும் பூமிதேவியையுங் குறித்து நின்றது. திருமால் சிதேவியையும் பூமிதேவியையும் பிரமா சரசுவதியையும் முறையே புணர்கிலரென்றவாறு. ஆமையானது தனக்கு யாதும் அபாயம் வருவதைக் காணின் தன்கால் நான்கினையுந் தலையையும் உள்ளேயிழுத்துக் கற்போல அசைவின்றிக் கிடக்குமாதலின் அதனை ஐந்தடக்கியென்பர்; ஆடவர் மகளிருவரும் அச்சமையத்தில் தம் ஐம்புலன்களும் இச்சைவழிச் செல்லுதலின்றி அடங்கிக் கிடக்கப் பெற்றனராதலின் "சிந்தையாமையின் ஒடுங்கப் பெற்றார்" என்றார். ஆசையுள்ளோர்கள் - திக்குப்பாலகர். இனி ஆசையுள்ளோர்களெல்லாமென்பதற்கு விருத்தர் பாலர் பிணியாளர் துறந்தோரென்னுமிவர்களை யொழிந்த இச்சையுள்ளவர்களாகிய ஆடவர் மகளிர் எல்லாருமெனப் பொருள் கொள்ளினும் பொருந்தும்,

உ௫. "மண்ணகத் துயிர்கண் முற்று மரதிநத் துயிர்கண் முற்றும்"

சிறுநலம் - சிற்றின்பம். கடைநின்ற காட்சியார் என்பதற்கு நான்கு ஆச்சிரமிகளுள்ளும் இறுதி நிலையிலுள்ளவர்களாகிய சந்நியாசிகள் என்றேனும் நான்கு பாதங்களுள் ஈற்றிற் சொல்லப்படுவதாகிய ஞானசாதனத்தையுடையவர்களாகிய ஞானிகளென்றேனும் பொருள் கொள்க. கடைநின்ற காட்சியார் என்பதற்குக் கடைத்தேறிய அறிவினையுடைய பெரியோர் என்ற உரை இத்துணைச் சிறப்பின்றென்க.

௩அ 'மயர்வொடு துறக்கமன்னன் மனைவத் யென்னு
மாண்டை"

மடர்வு - கவலை.

[ஆண்டை - அம்மேருவின்கணுள்ள; பொன்னின் இயன்முறை மனைவி - வியாழனுடைய பத்தினியாகிய தாரை]

௩0. "நிற்றலு மகவான்றன்னை நீடருள் புரிந்து நோக்கி"

[பொற்றனிக்கமலம் - பொற்றும்மரை.]

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

## மயூரகிரி புராணம்

இக்காலத்தில் "குன்றக்குடி"யென வழங்கும் சிறந்த சுப்பிரமணிய தலமாயுள்ள மயூரகிரித் தலபுராணமாகிய இவ்வரிய நூல், வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள் எழுதிய சிறந்த பொழிப்புரை, இப்பத்திரிகையின் ஆசிரியராகிய ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை நவமாக எழுதிச் சேர்த்த விசேடவுரை, உரையாசிரியர் வரலாறு, அவருடைய பிரதிமைப்படம் முதலியவைகளுடன் தெளிவாக அச்சிடுவித்து வனப்புறக் கட்டப் பெற்று வெளிவந்துள்ளது.

இப்புராணம் கந்தஷ்டி விரத புண்ணிய தினங்களில் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள சைவாலயங்கள் திருமடங்களில் சிரத்தையோடு படனஞ் செய்யப்படுவது. பிரதியொன்றன் விலை ரூபா 1. சதம் 50. (ரூபா 1. அணா 8) 5 பிரதிகளை ஒரே முறையில் வாங்குபவருக்கு ஒருபிரதி மேலதிகமாகக் கொடுக்கப்படும். எத்தனை பிரதிகட்காயினும் முற்பணமாக அனுப்பி வைப்போருக்கு முத்திரைச்செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும் இவ்வரியபுராணமும் உரையும் இப்பொழுது வெளியிடப்படாவிடின் அருகிவிடுமென அஞ்சியே வெளியிட்டமையின், செந்தமிழ்ச் சைவ அபிமானிகள் ஒவ்வோர் பிரதியையேனும் அபிமானித்து வாங்கிப் படிப்பார்களாக.

Apply to: PANDIT V. T. SAMBANDHAN
Vannarponnai (Jaffna)

(Mis 144

# சகலர்க்கும் சமமான நீதி

## திருவாங்கூர் மன்னரின் கொள்கை

### கொழும்பில் மகாராஜாவின் ஜனனதினக் கொண்டாட்டம்

—:—:—

திருவாங்கூர் மகாராஜாவின் பிறந்த தினத்தை முன்னிட்டுக் கொழும்பு நகர மண்டபத்திற் சென்ற செவ்வாய்க்கிழமை கூடிய பொதுக்கூட்டத்திற் பேசியவர்களிற் சிலர் மகாராஜாவின் ஆசியல் திறமையையும் அபிவிருத்திக் கொள்கையையும் புகழ்ந்து பேசினர்.

திரு. பி. ஆர். குரூப் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அங்கே கூடியிருந்தவர்களுட் பெருந் தொகையினர் திருவாங்கூர் வாசிகளாக இருந்தனர். திருவாங்கூர் மகாராஜாவுக்குச் சிறிது காலத்திற்கு முன்னதாக இலங்கையில் அளிக்கப்பட்ட உற்சாக வரவேற்புக்குச் சமானமானதுயாதொன்றும் வேறு இந்திய சமஸ்தானதிபதிகளுக்கும் அங்கே அளிக்கப்படவில்லையென்பதாகக் கூட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கும் பொழுது, தலைவர் கூறினர். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

திருவாங்கூர் இராஜ வம்சமானது இந்தியாவில் மிகப் பழமையானதாகும். அதற்குப் பாரம்பரையான கீர்த்தியுண்டு.

திருவாங்கூரின் பெருமை

திருவாங்கூர் மகாராஜாக்கள் வைதிக இந்துக்கள். முற்காலங்களிற் பூர்விக கிறிஸ்தவர்கள் மேல்நாடுகளில் மதம் சம்பந்தமான துன்பங்களுக்குட்படுத்தப்பட்டபொழுது திருவாங்கூர் மகாராஜாக்கள் அவர்களை வரவேற்றதோடு அவர்களுக்கு விசேஷ உரிமைகளையும்வழங்கினார்கள். இதன் காரணமாகத் திருவாங்கூரில் முஸ்லிம்கள், இந்துக்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியவர்கள் ஒரே சமஸ்தானத்தின் குடிகளாக ஒன்ருக வாழ்ந்து வருகிறார்கள்.

திரு. எஸ். பி. வைத்திலிங்கம் பேசியதாவது:- இந்திய சமஸ்தானங்களில் அதிக அபிவிருத்தியடைந்தவைகளிலொன்று திருவாங்கூர். தற்போதைய மகாராஜாவின் சிறந்த கொள்கையே மேற்படி அபிவிருத்தியின் முக்கிய காரணமாகும்.

கொழும்பு மேயர் டக்றர் ஆர். சரவணமுத்து பேசியதின் சுருக்கம் வருமாறு:- "கீழ்த் தேசங்களின் சில பகுதிகளில் ஜாதி பேதத் திட்டம் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. மேல்நாடுகளிலேற்படுவதுபோலுள்ள உபயோகமற்ற போட்டி அதன்மூலமாக ஏற்படுமா? கீழ் நாடுகளிலுள்ளவர்கள் நீதியை அடிப்படையாகக்கொண்டு தங்கள் ஜீவியத்தை நடத்துவார்கள். பணத்தைத் தங்கள் ஜீவியத்தின் அடிப்படையாகக் கொள்ளமாட்டார்கள். ஜாதிபேதத் திட்டத்தை நிராகரித்த இந்தியன் சம அந்தஸ்து, சுயேச்சை, ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையாக மனிதர்கள் வசிக்கக்கூடுமென்பதை உலகத்திற்குக் காட்டக்கூடும்.

மன்னரின் மனப்போக்கு

கல்விமந்திரி திரு. வி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா பின்வருமாறு பேசினர்:- மகாராஜா சமீபமாக இலங்கைக்கு விஜயமளித்தபொழுது, அவர் என்னோடுநடத்திய சம்பாஷணையிற் பின்வருமாறு கூறினர்:-"எனது பெரிய நகரங்களில் அசுத்தங்களிருக்கக்கூடாது. தொழிலாளருக்கும் முதலாளிகளுக்கு மிடையே சச்சரவுகளிருக்கக் கூடாது. முதலாளிகள் தொழிலாளரைச் சுரண்ட விடப்படாது. பல நூற்றாண்டுகளாகப் பெருந்தொகையான இந்துக்கள் கடவுளுடைய ஆலயத்தினுட் பிரவேசிக்க அநுமதிக்கப்படா திருக்கின்றனர். நான் அது நீதியல்லவென்றும் அபிவிருத்திக்குமுட்டுக்கட்டையென்றும் உணர்ந்து அந்த முட்டுக்கட்டையை நீக்கினேன்.

டாக்டர் ஏ. பி. டி. சொய்சா பேசியதாவது:— "எனது பிரஜைகளெல்லாம் எனது குழந்தைகளென்பதாக அசோக சக்கரவர்த்தி எழுதியிருக்கிறார். திருவாங்கூர் மகாராஜாவும் அந்த மகத்தான கொள்கையைப் பின்பற்றியிருக்கிறார்."

—

# மதத்தின் அவசியம்

## 'உலகிற் கடவுள் உணர்ச்சி குறைந்து வருகிறது'

### ஸேர் ராதாகிருஷ்ணனின் பிரசங்கம்

சென்னை (தபால்)

"மாறுபடும் உலகில் மதம்" என்ற விஷயத்தைப்பற்றிச் சென்ற ஞாயிறு சர்வகலாசாலைப் பரீட்சை மண்டபத்தில் ஸேர். எஸ். ராதாகிருஷ்ணன் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். பொதுமக்களில் ஏராளமான பேர்களும் மாணவர்களிற் பலரும் கூடியிருந்தனர். அட்வகேட் ஜெனரல் ஸேர். அல்லாடி கிருஷ்ணஸ்வாமி ஐயர் தலைமை வகித்தார்.

ஸேர். ராதாகிருஷ்ணன் பேசுகையிற் குறிப்பிட்டதாவது:- உலகத்திலுள்ள ஒவ்வொரு பாகத்திலும் இப்பொழுது பலத்த ஏக்க உணர்ச்சி மக்களைப் பற்றி நிற்கிறது; கடவுள் உணர்ச்சி வரவர உலகிற்குறைந்துவருகின்றது; இப்பொழுது எங்கும் மலிந்து கிடக்கும் வகுப்புச் சச்சரவுகளுக்கும் கட்சிக் கலவரங்களுக்கும் மதமே காரணமென முற்போக்குச் சிந்தனையாளர் கூறுகின்றனர். சமூகப் பிரச்னைகளை எதிர்த்து நிற்காத மதத்தைக் கட்டி அழைவதிற் பயனில்லை என்று இன்னுஞ் சிலர் சொல்லுகிறார்கள்.

எப்படியும் மனிதன் ஆன்ம உணர்ச்சி சிறிதுமில்லாமல் உண்பதும், உறங்குவதும், குடும்பங்களை வளர்ப்பதும், பிறகு மறைவதுமாகமட்டு மிருக்க முடியாது. "நான் யார்? என் வாழ்வின் முடிவு என்ன? நான் ஜென்மமெடுத்ததைச் சரிவரப் பயன்படுத்துகிறேனு அல்லது மிருகப் பிராயமாகவே இருக்கிறேனு?" என்பனபோன்ற கேள்விகளை அவன் தன்னைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது மனிதனை மிருகத்தினின்றும் வேறுபடுத்துவது இந்த மத உணர்ச்சியே. பாஸிஸம் பரவி நிற்கும் தேசங்களிலும், பொதுவுடமை வியாபித்துள்ள ருஷியாவிலும் மதமும் மதநம்பிக்கையும் அழிக்கப்படவில்லை. இவை வேறு உருவங்கொண்டு அங்குலாவுகின்றன.

"அவித்தை" காரணமாக உலகில் மதத்திற்கு அவசியமிருக்கின்றதெனஅறிந்து சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. "அவித்தையிலிருந்துதான் "அபிமானம்" சுயநல மனப்பான்மையும், மடைமையும் ஏற்படுகின்றது; ஆனல், ஒவ்வொருவரும் தன்னுட் பாரமார்த்திக உணர்ச்சியை வளர்த்து அச்சமின்மையையும் விடுதலையையும் பெறலாம்.

இன்று மனித வர்க்கத்திற்கு அத்தியாவசியமான தேவைகளுக்குப் பொருத்தமான ஒருமதத்தை வளர்க்கவேண்டிய தூஉலகின்கடமை.வெறும் மாயா தத்துவங்கள் இனி வேண்டியதில்லை. சொந்த அனுபவங்களினின்றும் நவபூர்வமான மதம்பிறக்கவேண்டும். மனிதனுக்கு முன் சமூகதத்துவம் ஓங்கவேண்டும். சத்தியத்தையும் அன்பையும் அடிப்படையாகக் கொண்ட மதந்தான் சிதறுண்டுகிடக்கும் இவ்வுலகத்திற்குப் புத்துயிரூட்ட முடியும்

சேர். அல்லாடி கிருஷ்ணசாமிஐயர், ஸேர். ராதா கிருஷ்ணனுக்கு வந்தனோபசாரம் கூறியதும் கூட்டம் இனிது நிறைவேறியது.

—

# பெற்றோரும் ஆசிரியரும்

### திரு V. வீரசிங்கம் சொற்பொழிவு

நான் இவ்வித்தியாசாலையைப் பல காலங்களாகப் பார்வை செய்து வருகின்றேன். பாடசாலைப் பிள்ளைகள் செய்த அப்பியாசங்களை நோக்குமிடத்துத்தமிழ்த்தாய் துயிலெழுகின்றாள் என்று சொல்லும்படியாக அமைந்திருக்கின்றது. பெண் பிள்ளைகள் இப்பொழுது புராண படனஞ் செய்தார்கள். இது மிகவும் விசேஷமாகும். பழைய காலந் தொட்டு ஆண்களே புராணபடனஞ் செய்துவந்தனர். தற்காலத்தில் பெண்களும் புராணங்களுக்குப் பயன் அறியக்கூடிய வன்மையைப் பெறுதல் தமிழ்த்தாய்க்குச் செய்யும் பெருந்தொண்டாகும்.

நம் நாடு மேனிலையடைய வேண்டுமாயின் அறிவுடையாரொருவர் கூற மற்றவர்கள தனைச் செய்தல்வேண்டும். இப்பொறுப்பு பெரும்பாலும் ஆசிரியர்களிலேயே பொறுத்துள்ளது. இன்னும் இவை வித்தியாதரிசிமார்களிலும், பொது ஜனங்களிலும் அமைதல் வேண்டும். நாம் தேடற்கரிய செல்வம் புத்திரச் செல்வமாகும். அப்பேற்றை வேண்டிய வழிவகைகளில் உபயோகித்தவர்களேயே செல்வர்களெனக் கூறலாம். அது தான் பிள்ளைகளின் பேச்சு, ஒழுக்கம் என்பனவாகும். இப்பொழுது இச் சபையாருடன் பெற்றோரும் தம்பிள்ளைகளின் சொற்களைக் கேட்டின்புறலே மேலான இன்பமாகும்.

கல்கற்ற வாசிகள் பெற்றோர்களை வழிபாடு செய்து அவர்தம் ஆசீர்வாதங்களைப் பெறுகின்றார்கள். எத்தனையோ பேர்கள் தாய்மார்களுக்குச் சத்தியஞ் செய்து கொடுத்து மேல்நாடுகட்குஞ் சென்று சத்தியத்தை இழக்காது சுயநாட்டை வந்தடைகின்றார்கள். இதனுல் இவர்களில் அநேகர் புகழ்வாய்ந்து விளங்குகின்றார்கள். தேசத் தொண்டர் அரவிந்தகோஷ் பெற்றார் ஆசீர்வாதம் பெற்றமையினுல் உலகில் பெரியராய் விளங்கினர். பெற்றார்கள் பிள்ளைகளின் அறிவு, வளர்ச்சி இவற்றைக் கவனித்துவரல் வேண்டும். இல்லாது போயின் இவைகள் குன்றிவிடக்கூடும்.

மலை நம்மிடம் வராவிட்டால் நாம் மலையிடஞ் செல்வோம் என மாமது கூறினர். பெற்றார்கள் பிள்ளைகள் விஷயத்திற் பாடசாலைக்கு வந்து வளர்ச்சியைப்பற்றி அறிந்து செல்லுதல் வேண்டும். அப்படியில்லாவிடில் ஆசிரியரே வீடுதோறுஞ் சென்று பெற்றாருக்கு அறிவு புகட்டுதல் வேண்டும். இப்படியான பழக்கம் ஒரு முறை செய்யின் மறுமுறை பெற்றார்களே பாடசாலைக்கு வந்து விசாரித்துச் செல்வர். இப்படியாகப் பலர் வந்து பிள்ளைகள் விஷயத்தில் கவனமெடுப்பின் பிள்ளைகளுந் திருந்துவார்கள். நம் யாழ்ப்பாண நாடும் மேனிலையடையும்.

இதுவே யாழ்ப்பாண நாட்டை மேனிலையடையச் செய்வதற்கேற்ற வழிவகையாகும். அரிதிற்கிடைத்த புத்திர செல்வத்தை வீணிற் போக விடுதல் தகாது. பெற்றோர்கள் பிள்ளைகள் சோதனை பாஸ்பண்ண வேண்டுமென்ற எண்ணமுடையவர். ஆசிரியர்கள் சோதனையில் சித்தியெய்தற்குரிய வழிவகைகளைக் காட்டி விடுகின்றனர். வித்தியா தரிசிமார் தம் தொழிலை நடத்தி வருகின்றனர். இவ்வாறெல்லாம் நடைபெற்றால் நம் பிள்ளை மேனிலையை யடைந்து விட்டானென்று கூறுதல் முடியாது. வித்தியாதரிசிமார் திருப்திபண்ணுவதற்காகவும், சோதனையில் சித்தியெய்துதற்காகவும் என்ற நோக்கத்துடனே கல்வி கற்கலாகாது. எங்கள் பிள்ளைகள் மேனிலையடைய வேண்டுமென்னும் நோக்குடனே கல்வி பயிற்றுதல் வேண்டும். பனைமரத்தை நோக்கி அம்பெய்தால் அது பனையினை வாசியமரத்திற்குத் தானும் இலக்குச் செல்லுதல் வேண்டும். வித்தியாதரிசிமார் உதவி செய்ய வருவதன்றிப் பிழைபிடிப்பதற்காக வருவதில்லை. ஆகையால் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் பொழுது உண்மையான இலக்கை வைத்துக் கொண்டுதான் கற்றல் வேண்டும்.

பிள்ளைகளுக்கு ஏற்ற உணவு கொடுக்காததினுல் தேகம் மெலிவடையக் கூடும். உடனே அதற்கேற்ற உணவுகளைத் தேடிக் கொடுத்து அவர்கள் வளர்ச்சி குன்றுமலிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். இதனுல் பெற்றோர்கள் உணவு விஷயத்தைப்பற்றி அத்தியாவசியகம் அறிய வேண்டும்.

தொட்டிலிற் பூண்ட பழக்கம் சுடுகாடுமட்டும் என்ற பழமொழி தமிழ் நாட்டில் 1000 ஆண்டு முன்னர் ஏற்பட்டுள்ளது. ஆனல் அவ்வுண்மையை மேலைத் தேயத்தவர் கண்டது இற்றைக்கு 100 ஆண்டுக்கு முன்னேயாகும். நம் தமிழ் மொழியில் எவ்வளவோ உண்மைப் பொருள்கள் அநாதிகாலந்தொட் டிருந்து வருகின்றன. ஒருவர் கோபக்குறி காட்டினுல் குழந்தை (அதாவது 2 வயதுக்குட்பட்டது) யும உடனே கோபக் குறி காட்டும். பிள்ளைகளின் நரம்புகள் மெல்லியவை. ஆகையினுல் கெதியில் கோபம் வருகின்றன. குழந்தைகள் முன்னிலையில கோபம் முதலான துர்க் குணங்கொன்றுஞ் செய்தலாகாது. அப்படிச் செய்தாலவை முற்கூறிய பழமொழிப்படி அப்பிள்ளையில் நெடுக நிலைத்து வளரக் கூடும். பெற்றோர்கள் ஒவ்வொருவரும் இதனை நன்கு அறிந்து பிள்ளைகளுக்கு நற்பழக்க வழக்கங்களை இளமையிலேயே பழக்கிக் கொள்ளுதல் வேண்டும். மேலைத் தேசத்தில் குழந்தைகளில் உளப்பான்மை வித்தியாசப் படுமாற்றை அறியும் பொருட்டு ஓர் ஆராய்ச்சி செய்தார்கள். சில குழந்தைகளை எடுத்து ஒவ்வோர் பிள்ளைக்கும் ஒவ்வொரு செவிலித் தாய்மார்களை விட்டுத் தனிமையாக வாழச் செய்தார்கள். நிறை, குணம் இவற்றைப்பற்றிக் குறித்து அவைகளில் வித்தியாசம் ஏற்படுமாயின் அவற்றைப்பற்றிஆராய்ச்சிகள் நடைபெறும். இப்படியாக வளர்க்கும் பொழுது ஒரு பிள்ளை தொட்டவுடனே எதற்குஞ் சிணுங்கும் கோபம் சடுதியல் வரும். இதற்குரியாவும் என்னவென ஆலோசித்துக் கடைசியில் அப் பிள்ளையை வளர்த்த செவிலித்தாயை மாற்றி வேறு தாயை வளர்க்கும்படி விட்டார்கள். பின்னர் அப்பிள்ளை முன்னைய நிலைபரத்தை யடைந்தது. அம்மாதின் குணங்களெல்லாம் பிள்ளைக்குக்கிட்ட இருந்தபடியால் இலகுவி லவை கைக்கொள்ளப்பட்டு விட்டன. ஆகவே பழக்க வழக்கங்கள் பிள்ளைகள் தொட்டிலிலிருக்கும்போதே ஏற்பட்டு விடுகின்றன. தாய் தந்தையர் நற்பழக்க வழக்கங்களை இளமையிலேயே பிள்ளைகளுக்குப் பழக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

விவேகானந்தரினது தாயார் கருப்பவதியாயிருக்கின்ற காலத்திலே பாரதம், இராமாயணம் முதலிய நீதி நூல்கள் கதைகளைப் படித்துக்கொண்டிருந்தார். நீதி நூலிலமைந்துள்ள வீரர்கள் பெருமையை நினைத்த அவரது எண்ணம் மகவையும் வீரமடையச் செய்வனவாயன; பெற்றோரும் பிள்ளைகளும் திவ்வியமானவராகநடத்தல் வேண்டும். அதனுல் பிள்ளைகள் மேனிலையையடையும்.

பாடசாலைகளிலே ஆசிரியர்கள் பிள்ளைகளின் குணங்களை மாற்றிவிட இயலாது. பெற்றோர் பசளையிலே 5 வது வரையில் விளைந்து பின் பாடசாலைக்கு வருதலினுற் பெற்றோரின் பழக்கமன்றி ஆசிரியர் பழக்கம் யாது செய்ய முடியும். ஆகையால் பெற்றோர்களே வேண்டிய பழக்க வழக்கங்களைத்தாங்களே பிள்ளைகளுக்குப் பழக்கிக்கொள்ளுதல் வேண்டும். இதனை நாம் ஆசிரியர்களிடத்திலே குறை சொல்லமுடியாது. பெற்றோரால் வளர்த்து விடப்பட்ட நற்பழக்கங்களையே ஆசிரியரால் இன்னுஞ் செப்பம்கூட வளர்த்துவிடக்கூடும்.


வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ்

என்றழைக்கப்பட்ட

**மலாயா வங்கி லிமிற்றட்**

(தொடுவாய் நாட்டிற் பதிவு செய்யப்பெற்றது)

அனுமதிபெற்றமுதல்:-$20,00,000-00 கட்டப்பட்டமுதல்:-$2,60,200-00

தலைமை ஆபீஸ்:- 2 வொச் அவென்யு, கோலாலம்பூர்

கிளை, ஏஜென்சி ஸ்தாபனங்கள், { யாழ்ப்பாணம், கொழும்பு, மதராஸ், சிள்ளான், செறம்பான், ஈப்போ.

இவ் வங்கியின் யாழ்ப்பாண ஆபீசில் சகலவித வங்கி முயற்சிகள், பணமாற்றல் 8 வீத வட்டிக்கு நகை ஈடுபிடித்தல், பினங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்கட்குக் கப்பற் துண்டு பெற்றுக்கொடுத்தல், உலகத்திலுள்ள பிரதான பட்டினங்களுக்குப் பணமனுப்புவதற்குத்தகுந்த வசதிகள் முதலியன செய்யப்படும்.

எஸ். பீ. யோசேப், மனேஜர், யாழ்ப்பாணம்.

வீ. பீ. நிக்கலஸ், மனேஜிங் டிறக்டர்.

(Y 54. 22-6-37—21-6-38.) (ஐ)


யாழ்ப்பாணம் சுப்பிரீங் கோடு, வழ-2

# மேரியைக் கடத்திச் சென்ற வழக்கு

## எதிரி நிரபராதியெனக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்

நமது நிருபர்

இரண்டாவதாக யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் உடுவிலில் வசிக்கும் சப்பிரமணியம் நடராசா வென்பவர் உடுவிலில் வசிக்கும் ஸ்ரீமதி வின்ஸோ என்பவவுடைய வேலைக்காரியாகிய மேரி என்பவளைக் கடத்திச்சென்று கற்பழித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது; விசாரணையின் பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியல்ல வெனக் கண்டு விடுதலை செய்தார்.


# குத்தகைக்கு நிலம்

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இந்துக் கல்லூரிக்குச் சொந்தமானவையும் கொக்குவிலில் உள்ளவையு மாகிய செக்கர் காடும் அதைச் சேர்ந்தவையுமாகிய **128** பரப்புள்ள காணி **3** வருஷங்களுக்குக் குத்தகைக்கு விடப்படும். குத்தகை கேட்க விரும்புவோர் வருஷம் ஒன்றுக்கு இன்ன தொகை தரமுடியும் என்பதைக் குறித்துத் தமது கேள்விப் பத்திரங்களை மேற்படி கல்லூரி நிருவாக சபைக் காரியதரிசி வழக்கறிஞர் திரு. R. சிவகுருநாதர் அவர்களிடம் வருகிறமீ **15** ந் திகதிக்கிடையில் அனுப்பி வைக்க வேண்டியது. குத்தகை எடுப்போர் ஒரு வருஷப் பணம் முற்பணமாகக் கட்டவேண்டும். மற்றும் வேண்டிய விபரங்களை அவரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.


அன்போடியைந்த வழக்
கேன்ப வாருயிர்க்
கேன்போ டியைந்த
தொடர்பு

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: ஈசுரஞு
ஐப்பசிமீ உகஉ திங்கட்கிழமை

## ஊரவர்களுஞ் சுகாதாரமும்

நமது யாழ்ப்பாணத்திலேயுள்ளவர்கள் சுகாதார விஷயத்தில் முழுக் கருமமும் அதிகாரிகளே செய்தல்வேண்டும், அவர்கள் செய்ய நாம் சுகமேயிருக்கலாமென்ற எண்ணத்தோடிருப்பதாகக் காணப் படுகின்றனர். சுகாதாரத்தில் மாத்திரமல்ல எந்தப் பொதுக் கருமத்திலும் தாமுஞ் சேர்ந்து முயற்சி செய்வதை விடுத்து அரசினரே செய்யட்டுமென்றிருத்தற்குக் காரணம், வேறொன்றுமல்ல, நீடித்த காலமாகச் சுயராச்சிய மிழந்த சுவாதீன மிழந்து ஆண்மை யிழந்து பறங்கியர் ஒல்லாந்தரென்னும் அச் சாதியார்களின் கீழ் அடிமைத் திறம் பூண்டிருந்ததும் இப்பொழுதும் 145 வருட காலம் வரையில் பிருத்தானியரின் கீழ் அவ்வாறு இருந்தலுமே இப்படி எதற்கும் பிறரை எதிர்பார்த்திருத்தற்குக் காரணமாகும்.

இந்த விதமாக இனிமேலும் இருத்தல் முடியாது; இந்தியாவிலே அடிமைத்திறம் ஒருவாறு நீங்கி விட்டதெனலாம்; இலங்கையிலும் மெல்ல மெல்லச் சனப் பிரதிநிதிகள் மந்திரிமாரின் இராச்சியம் ஆரம்பித்து விட்டது. ஆனதனால் இங்குள்ள மக்கள் தமது சமயம் சாதி தேசம் பாஷை யென்னு மிவைகள் விஷயமாகத் தாம் தாம் முற்பட்டு உழைக்க முயலுதல் வேண்டும்; சுகாதார விஷயமாகவும் ஊரவர் பிரதானமாக உழைத்தல் வேண்டும். பட்டினத்திலேனும் கிராமங்களிலேனும் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் வீடுகள் வீட்டுச் கொல்லைகள், அயலிடங்கள் ஒழுங்கைகள் தெருக்கள் என்னு மிவைகள் விஷயமாகச் சுகாதார முறைகளை அநுசரித்து வந்தால் உணவு பானம் உடை நடை முதலியவைகளிலும் சுகாதார நெறியைக் கைக்கொண்டு வந்தால் சுகாதாரப் பகுதி அதிகாரிகட்கு அதிக வேலை நேராதெனலாம். அவர்களுக்கு மாத்திரமல்லக் காலகதியில் டக்டர்மார் வைத்தியர்கள் என்னு மிவர்களுக்கும் வேலையில்லையெனலாம்.

ஆனல் இப்பொழுது இப்பட்டினத்திற் குடியிருப்போர் செய்வதென்ன? தத்தம் வீட்டுக் கொல்லைகளிலுள்ள அழுக்குகளையும் நுளம்பிற்கு உற்பத்தித் தானங்களாயுள்ள செடி கொடி புற்களையும் சுத்தஞ் செய்ய நினைக்கின்றார்களில்லை. அப்படித்தான் நினைத்துச் சுத்தப் படுத்தினலும் அவ் வழுக்கையும் வெட்டிய செடிகொடி புற்களையும் கலவோடு பீங்காேனடு முதலியவற்றையும், இவை மட்டோ செத்த எலி நாய்க்குட்டி பூனைக் குட்டிகளைத் தானுங் கொண்டுவந்து தெருவீதியிலும் ஒழுங்கையிலும் பாதையிலும் கொட்டி விட்டும் போட்டு விட்டும் போய் விடுகிறார்கள்; இவை மாத்திரமல்ல, இந்த மாரிக் காலத்திலே எந்தத் தெருவைப் பார்த்தாலும் எந்த ஒழுங்கையைப் பார்த்தாலும் இடையிடையே மலத்தோடுதான் அவைகள் காணப்படுகின்றன. இலங்கையின் ஏனைய பாகங்களிலுள்ள பட்டினங்களிலும் கிராமங்களிலும், இப்படியான அநுசிதங்கள் காணப்பட மாட்டா. காரணம் அந்த அந்தப் பட்டின வாசிகளும் கிராமவாசிகளும் சுகாதாரத்திற் கண்ணுங் கருத்துமாய் இருத்தலே யாகும்; இங்குப் பரவியிருக்கும் அநுபானமும் சுகாதாரத்திற்குப் பெருஞ் சத்துருவாகும்.

இந்த யாழ்ப்பாணத்திலேயுள்ளவர்களாகிய தமிழ் மக்கள், இத் தமிழ் மக்களுள்ளும் விசேஷமாகச் சைவ சமயத்தினர் பரம்பரையாக ஆசாரத்திலும் சுகாதாரத்தைப் பேணி நடப்பதிலும் பேர் பெற்றவர்களாய் இருந்தனர். காலகதியில் நவநாகரிகத்தினலும்விபரீதஉணவு பழக்க வழக்கங்களினலுமே இவர்கள் சுகாதார அநுஷ்டானத்தைக் கைவிடலாயினர். கைவிட்ட இதனைப் பழைய நிலைமைக்கு இனியேனுங் கொண்டு வருவதற்கு ஏற்ற முயற்சி செய்தல் வேண்டும். சுகாதார முறைகளைப் பிரதானமாகப் பள்ளிக் கூடங்களிற் பிள்ளைகட்கு ஊட்டுதல் வேண்டும்; அப்படி ஊட்டும் போது புத்தகப் படிப்பளவில் மாத்திரம் நின்று விடாது சாதனையிலும் அவர்கள் சுகாதாரத்தைப் பயிலத் தக்கதாகச் செய்து விடல் வேண்டும். பட்டின வாசிகள் கிராமவாசிகள் என்னுமிவர்கள் சுகாதாரப் பகுதி அதிகாரிகளுடன் ஒத்து உழைப்பாரேயானல் காலகதியில் இவ் வியாழ்ப்பாணமுஞ் சுகாதாரத்திற்குரிய ஒரு நாடாகு மென்பது காத்திருக்கத் தக்கதாம். யாழ்ப்பாணத்திலே சுகாதாரத்திற்குப் பேராதார மாகவுள்ள 'பார்க்' எனப்படும் பூஞ்சோலை ஒன்றேனும் ஆவசியகம் வேண்டும். இதனை எங்கள் பட்டின பரிபாலன சங்கத்தவர்கள் சிந்தித்தல் வேண்டும்.

*

## மந்திரிமாரின் வெற்றுரை

"நெஞ்சிலுரமுமின்றி நேர்மைத்
திறனுமின்றி
வஞ்சனைசொல்வாரடி—கிளியே!
வாய்ச்சொல்லில் வீரரடி
கூட்டத்திற் கூடிநின்று
கூவிப்பிதற்றலன்றி
நாட்டத்திற்கொள்ளாரடி—கிளியே!
நாளில் மறப்பாரடி"

என்று பாரதிப்புலவன் பாடினன். இம் மொழிகளின் உண்மையை நாம் இலங்கை மந்திரிமார்களிடம் நிதர்சனமாகக் காண்கின்றோம். சின்னட்களுக்குமுன், இரத்தினபுரியில் நடந்த ஒரு கூட்டத்தில் நமது உள்நாட்டுமந்திரி ஸேர். பரன் ஜெயத்திலகா உருக்கமான ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். நமது நாட்டுப் பாமரமக்களிற் பலர் உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி வருந்துகின்றனர் என்று மிக உருக்கமாக அவர் பேசியுள்ளார். "அவர்களுக்குப் போதிய வைத்திய வசதிகள் இல்லை; மலேறியா என்னும் காட்டுச் சுரத்திற்கு அவர்கள் ஆளாகின்றார்கள். இலங்கையிற் கிராமப் புனருத்தாரணவேலை அதிகமாகச் செய்யப்படவேண்டி இருக்கின்றது இந் நாட்டின் உருவத்தையே நாம் மாற்றிவிடலாம். நமக்கு ஏராளமான வழிவகைகள் இருக்கின்றன. ஆயின் போதிய கல்வியின்மையினலும் ஏனைய வசதிகளின்மையினலும் எம்மவரிற் பெரும்பான்மையோர் வறுமையில் ஆழ்ந்துபோய்க் கிடக்கின்றனர்." என்னும் சாரப்பட ஸேர். பரன் பேசியிருக்கின்றார். இவை யனைத்தும் உண்மையே. எனினும் வாசாமகோசரமாக இவ்வாறு பேசிவிட்டால் நிலைமை திருந்திவிடுமோ? ஒருபோதும் இல்லை. சொல்லியவண்ணம் அக்குறைகளை நிவிர்த்திப்பதற்கு ஸேர். பரனும் அவரது சகோதர மந்திரிமார்களும் என்னென்ன வழிகளைக் கையாடினர்? கிராமப்புனருத்தாரணத்திற்காக இதுவரை என்ன செய்யப்பட்டிருக்கிறது? அரசாங்கசபையில் வரவுசெலவுத் திட்டத்தைப்பற்றி விவாதம் நடந்தபோது ஏழைப் போது சனங்களின் நிலைமையைப்பற்றி மிக்க உருக்கமான சொற்பொழிவுகள் பலரால் நிகழ்த்தப்பட்டன. பலர் நீலிக் கண்ணீர் வடித்தனர். பின் நிலைமையைத் திருத்துவதற்கு அவர்களால் என்னென்ன செய்யப்பட்டன. வேறெங்காட்டைக்காட்டினும் இலங்கையிலேயே ஏழை மககளின் நிலை ஆவசியகம் திருத்தப்பட வேண்டியிருக்கின்றது. ஆகவே, அதற்குரிய வழிவகைகளைக் கையாடுவதை விடுத்து வெறும் சொல்லளவில் மாத்திரஞ் சொல்லிக்கொண்டிருப்பதால் ஆம் பயன் ஒன்றுமில்லை.

இந்திய தேசீய மகாசபையார் பதவியேற்று எவ்வளவு காலமாகிவிட்டது? ஆக நான்கு மாதங்கள் ஆவதற்கிடையிலேயே அவர்கள் எத்தனையோ பல முன்னேற்ற வேலைகளைச் செய்திருக்கிறார்கள். எத்தனை ஆயிரம் அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்? எத்தனை சங்கங்கள் தம்மீது விதிக்கப்பட்ட தடையுத்தரவுகளினின்றும் நீங்குவனவாயின. மதுவிலக்குச் சட்டம் நடைமுறையிற் கையாளப்பெற்று வருகிறது. இங்ஙனமெல்லாம் பற்பல அரிய பணிகளை அங்குள்ள மந்திரிமார்கள் செய்திருத்தலைக் காணலாம். நமது மந்திரிமார்கள் இவற்றை அறியார்களா? இதுவரை தாங்கள் கேட்பவர் காதுகுளிரப் பேசினதன்றி உண்மையிற் செய்ததுதான் என்ன என்று சிந்தித்துப் பார்த்தார்களா? பார்த்திருப்பரேல் அவர்கள் செய்தது போல முழுதுமே செய்யாவிடினும் நூற்றில் ஒரு சிறு பகுதியையேனும் செய்ய முயன்றிருப்பார்களல்லவா? அதனை விடுத்து அடுத்த தேர்தலில் தெரிவு செய்யப்படுவதற்காகச் சனங்களை மருட்டுதற்கோ அல்லது இதுபோன்ற வேறு காரணங்கள் பற்றியோ வெறுமனே வாய்ச்சொற்களைக் கொட்டி அவற்றைச் செயலிற் கையாடத் துணியாமல் இருப்பது அற்பர்தம் செயலாகும். இத்தகையோர்எமக்குத்தலைவர்என்று இருப்பதினும் இல்லாமலிருத்தல் சாலச் சிறந்ததாகும். இந்தப் போலித் தலைவர்கள் எம்மை விட்டுவிலக உண்மையிலேயே தேசநன்மையை நாடி உழைக்குந் தலைவர்கள் இலங்கையில் தோற்றும் நாள் எந்நாளோ யாமறியோம்.

## யாழ்ப்பாணப் பட்டினபரிபாலன சங்கம்

மேற்படி சங்கக் கூட்டமொன்று சென்ற அக்டோபர்மீ 26ந் திகதி செவ்வாய்க்கிழமை சங்க மண்டபத்திற்றானே கூடியது. அக்கூட்டத்தின் தீர்ப்பின்படி கீழ்வரும் சந்தைகளின் குத்தகைகள் விற்கப்படலாயின. யாழ்ப்பாணப் பெரியகடையைச் சேர்ந்த காய்கனி தாவரப் பொருள் விற்கப்படுஞ் சந்தைக்கும் கறிக் கடைக்கும் வண்டிக்காலை பஸ் காலைகட்கும் இப்பொழுது கேட்கப்படுங்குத்தகை போதியதன்றாதலின், புதிய கேள்விப்பத்திரங்களைத் தருவிக்கலாமெனத் தீர்ப்புச் செய்யப்பட்டது. சின்னக்கடைக் குத்தகை S. முத்துக்குமாரு என்பவருடைய கேள்விப்படி 2854 ரூபாவாக அவருக்குக் கொடுக்கப்பட்டது. கைக்குள சந்தை S. பொன்னையா என்பவரின் கேள்விப்படி 2424 ரூபாவாகக் கொடுக்கப்பட்டது. தட்டாதெருச் சந்தைக் குத்தகை J. சிமாம்பிள்ளை கேள்விப்படி 275 ரூபாவாகக் கொடுக்கப்பட்டது. தட்டாதெருச் சந்தைக் குத்தகை ஏலத்தில் விற்கப்படும்.

நிகழும் நவம்பர்மீ 27உ யாழ்ப்பாணப் பட்டின சங்க மண்டபப் பிரவேசத்திற்கு ஸேர். துரைசுவாமியவர்களே தலைமை வகிக்கக் கேட்கப்படல் வேண்டுமெனவுந் தீர்மானிக்கப்பட்டது. அந்தச் சமையத்தில் புதினப் பத்திரிகைகள் மூலமாக விளம்பரஞ் செய்து பட்டின வாசிகளையுஞ் சமுகஞ் செய்யக் கேட்டல் வேண்டுமெனவும் நிர்ணயிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோடு, வழ-1

# வசாவிளான் வழக்கு முடிவு

## பொய்ச் சாக்ஷியங் கூறிய மூவருக்குத் தனித்தனி மூன்றுமாதக் கடூழியம்

## எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டிற் சென்ற வியாழக்கிழமையன்று வசாவிளான் வழக்கில், வழக்காளி பக்கச் சாக்ஷிகள், ஒரு சட்ட மாணவன் உட்பட, மூவர் பொய்ச்சாக்ஷியம் சொன்ன குற்றத்திற்காகத் தனித்தனி மூன்று மாசக் கடூழியமறியல் தண்டனை விதிக்கப்பட்டனர்.

மேற்படி வழக்கு திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டு வியாழக்கிழமையன்றே முடிவுபெற்றது. எதிரிகள் அனைவரும் குற்றவாளிகளல்லர் எனக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கில் வசாவிளான் விதானையார் உட்பட எண்மர் சட்ட விரோதமான கூட்டத்தலைவராயிருந்தனரென்றும், பலருக்கு வாள்களாலும் கத்திகளாலும் காயம் விளைத்தனரென்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். வசாவிளான் விதானையும் ஏவரோர் எதிரியும், வழக்காளிபக்கச் சாக்ஷிகளை விசாரித்துமுடிந்ததும், விடுதலை செய்யப்பட்டனர். அதன்பின், யூரிமார் ஏனைய எதிரிகளும் குற்றவாளிகள் அல்லர் என்று ஏகோபித்த தீர்மானங் கூறினர்.

அதன்பின், நீதிபதி வழக்காளிபக்கச் சாக்ஷிகளை அழைத்து, அவர்களிற் பலருக்குப் பொய்ச் சாக்ஷியம் கூறியதற்காகத் தகுந்த தண்டனைகள் விதித்தனர்

அப்பாத்துரை, K. V. சுப்பிரமணியம் என்னும் சாட்சிகள் தனித்தனி மூன்றுமாதக் கடூழியத்தண்டனை விதிக்கப்பட்டனர்.

அதன்பின், நீதிபதி K. V சுப்பிரமணியத்தின் சகோதரன் K. V. சாரங்கபாணியை அழைத்து, சாக்ஷி பொய்ச் சாக்ஷியங் கூறியதற்காக வன் தண்டனை விதிக்கப்படாது என்று கேட்டார்.

சாக்ஷி அது தான் வேண்டுமென்றே சொன்ன பொய்ச் சாக்ஷியமல்லவென்றும், கலக்கத்தாலேயே அவ்வாறு சொல்ல நேரிட்டதென்றும், தான் சட்ட மாணவனயிருத்தலால், தனது பிற்கால சீவியத்திற்குப் பங்கம் வாராமல் தன்னை மன்னிக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார். ஆயின், நீதிபதி சாக்ஷி ஒரு சட்ட மாணவனயிருந்துகொண்டும் அவ்வாறு செய்ததினல் அதை மிக்க பாரதூரமான குற்றமாகக் கருதுவதாகக் கூறிச் சாக்ஷிக்கு மூன்றுமாதக் கடூழியத் தண்டனை விதித்தார்.

N. கந்தையா, என்னும் சாக்ஷி எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அன்றியும், வழக்காளி பக்கச் சாக்ஷிகளில் உத்தியோகமுறையில் வந்த சாக்ஷிகளைத் தவிர்ந்தவனைய சாக்ஷிகள் ஒருவருக்கும் வத்தா கொடுக்கவேண்டாமென்றும் நீதிபதி உத்தரவிட்டார். பொய்ச்சாக்ஷி சொல்லும் எவருக்கும் தான் தகுந்த தண்டனை விதிக்கத் தயாராயிருப்பதாக நீதிபதி கோட்டில் குழுமியிருந்தோர் அனைவருக்கும் எடுத்துக் கூறினர்.

எதிரிகள் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டனர்.


உ

## திருமண அழைப்பு

ஸ்ரீகாந்தன்-மகேஸ்வரி

நிகழும் ஈசுர ஆண்டு ஐப்பசித்திங்கள் கூ௦-ம் நாள் திங்கட்கிழமை (நவம்பர் 15உ) முற்பகல் 11 மணியளவில் வரும் மகாலக்கின சுபவேளையில் வண்-மேற்கு திருவாளர் செ. மயில்வாகனம் அவர்களின் ஏகபுத்திரன் திருவளர் செல்வன் ம. ஸ்ரீகாந்தன் C. C. S. அவர்களுக்கும் வண்கிழக்கு ஆயுர்வேத வைத்தியர் திருவாளர் முத்துக்குமாரு அவர்களின் கனிஷ்டபுத்திரியும், வைத்தியர் திருவாளர் மு. கதிரவேற்பிள்ளை அவர்களது சோதரியுமாகிய திருவளர் செல்வி மு. மகேஸ்வரிக்குந் திருமணஞ்செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் சமுகமளித்து மணமக்களை மனமுற வாழ்த்தி ஏகுமாறு வைத்தியர் மு. கதிரவேற்பிள்ளையவர்களும், டக்டர் வை. த. பசுபதிப்பிள்ளை யவர்களின் பாரியார் கமலாம்பிகை அம்மையாரும் தங்கள் நண்பர்களை வேண்டிக்கொள்ளுகின்றனர்.

கஸ்தூரியார் வளவு,
வண்ணை, 30-10-37.

(Mis 160. 8 & 11-11-37)


## ஊர்காவற்றுறை-காரைநகர் மிதப்புப்பாதை

### முந்தி 1மணிநேரம் இப்போ 5நிமிஷம்

ஊர்காவற்றுறையிலிருந்து காரைநகருக்கு இல்லையேல் காரை நகரிலிருந்து ஊர்காவற்றுறைக்கிடையிலுள்ள கடல்பாதை மூலமாகக் கடந்து இக்கரையேனும் அக்கரையேனுஞ் சேர்வதற்கு முந்திக் குறைந்த மதிப்பு 1 மணி நேரமாயினுஞ்செல்லுமல்லவா. ஆனல், சென்ற சிலவாரங்களாக, குறித்த மிதப்புப் பாதையிலே ஒரு யந்திரம் மாட்டி இழுக்கப்படுதலால் 5 நிமிஷத்தில் அப்பாதை இக்கரையிலிருந்து அக்கரைக்கேனும் அக்கரையிலிருந்து இக்கரைக்கேனுஞ் செல்லத்தக்கதாயிருக்கின்றது. முந்திய ஒழுங்கினல் ஏற்பட்ட காலதாமசம் சிரமம் முதலியன வெல்லாம் இந்தப் புதிய முறையைக் கணவே பரிதிமுன்பட்ட பனிப்படலம் போல் அகலலாயின. இந்த நுட்பத்தைக் கண்டுபிடித்து நடத்துவோர் ஸ்ரீ திருச்செல்வம், திரு. பொன்னையா என்னுமிருவருமேயாவர். இவர்கள் செயல் மிகவும் பாராட்டத் தக்கதாகும்.

# ஜப்பானின் ஒத்துழையாமை

## இருகட்சிகளுமிருந்தால்தான் அனுபவசாத்தியமான முடிவேற்படு மென்கிருர் இத்தாலிய பிரதிநிதி

### பிரிட்டிஷ் அமெரிக்க ஒத்துழைப்பு

ரக்பி நவம்பர் 3—

பிரஸ்ஸல்ஸிற் குழுமியிருக்கும் சர்வதேச மகாநாட்டில் பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி காப்டன் ஈடன் பேசியதாவது: 'எனக்குச் சிறிது முன் அமெரிக்கப் பிரதிநிதி திரு. நோர்மன் டேவிஸ் பேசினர். பிரிட்டன் அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் முழுமனத்துடன் ஆதரிக்கிறது. இம்மகாநாடு வெற்றிகரமாக முடிவடைவதற்குப்பிரிட்டிஷ் அரசாங்கம் தனது பூரண ஒத்துழைப்பையளிக்கத் தயாராக விருக்கிறது.'

### திரு. நோர்மன் டேவிஸ் பிரசங்கம்

தூரக்கிழ்ப் பிரதேசத்தில் நடக்கும் சண்டை ஜப்பானுக்கும் சீனுவுக்கும் தான் கவலையைக் கொடுக்கிறதென்று சொல்ல முடியாதென்றும், ஆனல் அது உலகத்திற்கே மிகுந்த கவலையைக் கொடுத்திருப்பதாகவும், இதனல் சமாதானத்தை விரும்பும் நாடு ஒவ்வொன்றும் தங்கள் சுயமரியாதையைப் பாதுகாக்க வேண்டியவர்களாக விருக்கிருர்களென்றும் திரு. டேவிஸ் சிறிதுமுன் தமது சொற்பொழிவிற் சொன்னர்.

பிற்பகலிற் பிரஞ்சு அயல்நாட்டு மந்திரி எம். டெல்போஸ் பேசினர். டக்றர் வெல்லிங்டன் கூ சீனுவின் சார்பாகத் தமது கட்சியை எடுத்துரைத்தார்.

### 'ஜப்பானியரின் மிருகத்தனமான போக்கு'

இம்மகாநாட்டிற்கு ஜப்பான் தனது பிரதிநிதியை அனுப்பாதிருந்து கொண்டதால் தான் வருந்துவதாகவும், இதனல் மகாநாட்டின் முயற்சிகள் பாதிக்கப்படுமென்றும் காப்டன் ஈடன் குறிப்பிட்டார்.

பின்னர் இத்தாலியின் பிரதிநிதியான கவுண்ட் மொரிஸ் கோட்டி மிக அலக்ஷியமான முறையிற் பேசினர். இம்மகாநாடு அனுஷ்டான பூர்வமான நடவடிக்கைகளையே கவனிக்கவேண்டுமென்றும், அப்படியானுற் சம்பந்தப்பட்ட இரு கட்சிகளையும் ஒன்ருகக் கொண்டுவரவேண்டுமென்றும் அவர் பேசினர்.

மிருகத்தனமான நடவடிக்கை

சீனுவின் பிரதிநிதியான டக்றர் வில்லிங்டன் கூ பேசியதாவது: -

"தூரக்கிழ் நிலைமையை மேல்நாட்டவர் நன்கு அறிந்துகொள்ள முடியாதென்று ஜப்பான் எப்பொழுதும் ஆட்சேபனை செய்கிறது. ஆனல், குரங்குப் பிடியாக அக்கிரமமான முறையில் நடத்தும் இராணுவ நடவடிக்கை மாத்திரம் அதன் மூளைக்கு எட்டுகிறதில்லை. ஜப்பான் இன்று தான் கொடுத்த வாக்கை மீறி நடக்கிறதும் போகத் தனது சொந்த நல உரிமைக்கும் எதிரிடையாக நடந்து கொண்டிருக்கிறது.

சீனுவில் ஜப்பான் மிருகத்தனமாக நடத்தும் நடவடிக்கைகளையும் உலகத்தின் கண்டனங்களையும் அவர் எடுத்துக் கூறினர்.

மாலை 6-15 மணிக்கு இந்த மகாநாடு அடுத்தநாள் மாலை 2-30 மணிவரை பின்போடப்பட்டது. அன்று கொமிற்றி இரகசியமாக நடவடிக்கைகளைக் கவனிக்கும்.

இறுதியான முயற்சி

இந்த மகாநாட்டிற்கு ஜப்பான் விஜயமளிக்க, இறுதியான முயற்சி செய்யப்படும். ஆனல், இது வெற்றியடையுமென்று திட்டமாகக் கூறமுடியாது.

சமரஸ வதந்தி

சீனுவையும் ஜப்பானையும் சமரஸஞ் செய்துவைக்கும்படி இம்மகாநாடு அமெரிக்காவையும் பிரிட்டனையும் கேட்டுக் கொள்ளலாமென்று இங்கு வதந்தி உலாவுகிறது. அப்படியான உத்தேசத்தை இரு கட்சிகளும் அல்லது ஜப்பான்தான் வரவேற்குமென்பது மிகமிகச் சந்தேகம்.

## சீனச் சர்வ கலாசாலை நாசம்

### ஜப்பான்மீது நிர்ப்பந்தமுறைகளைப் பிரயோகிக்க வற்புறுத்தல்

ஹாங்கிங் நவ 5

சீன சர்வகலாசாலைகளின் தலைவர்களும், புரபஸர்களுமான 102 பேர்களின் கையெழுத்துக்கள் கொண்ட ஒரு அறிக்கையில், ஜப்பானிய விமானங்கள் குண்டுகளைப் பொழிந்து 23 சீன சர்வகலாசாலைகளையும், கல்லூரிகளையும், பல பள்ளிக்கூடங்களையும் நாசம் செய்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சீனர் கல்வியைக் குலைக்க வேண்டுமென்பதே ஜப்பானின் நோக்கமெனத் தெரிகிறதென்றும், பிறநாடுகள் ஜப்பான் மீது கடுமையான நிர்ப்பந்த முறைகளைப் பிரயோகிக்க வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

## மன்னரும் நீர்ப்பாய்ச்சு வரியும்

—:o:—

### உப - ஏஜன்றரின் கட்டளை

நீர்ப்பாய்ச்சு வரிகளை இறுக்கத் தவறிய காரணமாக வறிய சனங்களின் காணிகளை அரசினர் பிடித்துக்கொண்டதைபிட்டு கடும்போக்குமாறு இரந்து கேட்டு மன்னர் மாதோட்ட மகாசன சபையாரிலே சென்ற வெள்ளிக்கிழமை தேசாதிபதி அவர்களுக்கு ஓர் மனுப்பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. உள்ளபடியே யாதுங் கஷ்டநஷ்டங்கள் நேருமிடத்து நீர்ப்பாய்ச்சு வரிகள் அறவிடாது நீக்கிவிடப்படுமென்று அரசாங்க சபையிலே கமத்தொழில் மந்திரியார் தெரிவித்திருந்தாரென்றும், அதன்பேரில் மன்னர்-மாதோட்ட மகாசனசபையின் தூதுக்கோஷ்டி யொன்று சென்ற புரட்டாசி மாசம் 30-ந் திகதி மன்னர் உப ஏசன்றரைப் பேட்டிகண்டு மன்னர்ப்பிரிவிலே நீர்ப்பாய்ச்சுவரிகளை நீக்கிவிடுதற்கான காரணங்களை எடுத்துக்காட்டியதென்றும், ஆனல் பிந்த அவ்வரியிறுக்கத் தவறினவர்களின் சொத்துக்களை விற்று அவ்வரிப்பணங்களை அறவிடவேண்டுமென்று உப ஏசன்றரால் கட்டளை பிறப்பிக்கப்பட்டதென்றும் அம் மனுப்பத்திரத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

—:o:—

### வடமாகாண ஏஜண்டர்

#### கண்டி நகரசங்கத்தலைவராக நியமனம் பெற்றிருக்கிருர்

வடமாகாண ஏசன்றராகக் கடமை பார்த்து வந்தவரான திரு. எம். கே. சி. சான்டூஸ் அவர்கள் இம்மாசம் 4-ந் திகதி முதல் கண்டி நகரசங்கத் தலைவராக நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்ருர்.

## இந்துசாதனம்

### சொல்லாக்கப் போட்டி இலக்கம் 3

#### சரியான விடை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தீ | 2 பா | 3 வ | லி | ■ | 4 சு | 5 கி | ர் | 6 த | 7 ம் |
| 8 வ | ச | ந் | 9 த | ம் / ன் | ■ | ள் | ■ | ரு | ன |
| ட் | ந | தி | ப | ■ | 10 ச | ஜா | 11 பு | ப் | த |
| டி | ம் | க | கீ | ■ | த் | ■ | ■ | பை | வே |
| ■ | ■ | ள் | ய | 12 க | தி | ரோ | ன் | ■ | ரி |
| ■ | 13 வ | ■ | ம் | ந் | ய | ■ | 14 ச | 15 ர | ப |
| 16 பு | ச | ல் | ■ | தா | வா | ■ | வ் | ண | ■ |
| த் | 17 தி | ண் | 18 ணி | ய | ன் | ■ | 19 வ | ம் | 20 பு |
| த | ■ | 21 மு | க | ம் | ■ | 22 ப | ரி | கா | ரி |
| ன் | 23 அ | ய | ன் | ■ | 24 க | ளா | சி | ■ | சை |

#### பரிசு பெற்றவர்களின் விபரம்:

1-ம் பரிசு

இல.

1. 32 சு. மீனாயதாட்சி, ஐயனுர்கோவிலடி வண்ணுர்பண்ணை
2. 35 செ. இரதிமதி, உரும்பராய் வடக்கு
3. 36 க. கெங்காதரன், ஆசிரியர் ஆனைக்கோட்டை
4. 52 S. S. நித்தியானந்தன், நாயன்மார்கட்டு

2-ம் பரிசு

1. 13 மிசிஸ் செல்லம்மா சீனிவாசகம், உரும்பராய் வடக்கு
2. 62 K. பஞ்சாட்சரம், நீர்வேலி வடக்கு

இல 1. இளையதம்பி தங்கம்மா, அராலிவடக்கு, கூப்பனேடு பணம் அனுப்பாதபடியால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இல 11. சி. வீரசிங்கம் C/o J. சின்னத்துரை பூனகரி இரு கூப்பன்கள் வைத்து, ஒரு கூப்பனுக்குப் பணம் அனுப்பியபடியால் முதற் கூப்பனே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

போட்டி ஆசிரியர்.

"சொல்லாக்கப்போட்டி" இல. 3

C/o மானேஜர், இந்துசாதனம், வண்ணுர்பண்ணை.

## மாக்டொனல்ட் தென் அமெரிக்கா செல்லுகிருர்

திரு. ராம்ஸே மாக்டொனல்ட் தமது மகள் ஷெயிலாவுடன் இன்று தென் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்ல விருக்கிருர்.

## ஐரோப்பாவில் சூழ்ச்சி

### சீனுவின் செல்வத்தைச் சுரண்ட யோசனை

மந்திரி ஈடன் விஷமம்

"செய்னுல்ட்ஸ் வீக்லி" என்ற பத்திரிகையில் பின்வருமாறு ஒரு செய்தி காணப்படுகிறது.

பிருத்தானிய மந்திரி அந்தோனி ஈடன் ரகசியமாக ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் ஒரு யோசனை விடுத்துள்ளார். தங்களிடையுள்ள தகராறுகளை ஒழித்து விட்டு, அனைவருமாகச் சீனு மீது கவனம் செலுத்த வேண்டுமென்பதே அதன் சாரம். சீனரின் ராஜீய சுதந்திரத்திற்குப் பாதகமற்ற முறையில் அந்நாட்டின் பொருளாதாரச் செல்வத்தைப் பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி இம் மூன்றும் அமெரிக்காவுடன் சேர்ந்துசுரண்டுவதுதான் புத்திசாலித் தனமென மிஸ்டர் ஈடன் தெரிவித்திருக்கிருர். இந்த யோசனையில் ஜெர்மனியும் இத்தாலியும் விசேஷ சிரத்தை காட்டி வருவதாகத் தெரிகிறது. ஜெனரல் சியாங்கெய் ஷேக்கும் இதை ஒப்புக்கொண்டுள்ளார். இவ்விஷயமாக அந்நாடுகளிடை ஒரு ரகசிய ஒப்பந்தம்

## புதிய ஸ்டார் டோக்கிஸ் "நல்லதங்காள்"

இப்படக்காட்சி மண்டபத்தில் இப்போது C. S. ஜெயராமன், M. S. தாமோதரராவ், P. S. சிவபாக்கியம், T. N. வாசுதேவபிள்ளை. ஆதியோர் நடித்த "நல்லதங்காள்" என்னும் இனிய தமிழ்ப்பேசும் படம் காட்டப்பெற்று வருகின்றது. இப்படம் புதனின்று கடைசிவரை மிக்க உருக்கமானது. நல்லதங்காளது பாட்டும் மூளியலங்காரியின் நடிக்கும் திறமையும் நல்லதங்காளின் மூத்த மகன் ஞானசுந்தரனுக நடிக்கும் வாலிபனது பாடுந் திறமையும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. கற்பின் மகத்துவமும் வறுமையின் கொடுமையும், நல்லோரைத் துன்புறுத்தியோர் ஈற்றில் அதற்குரிய தண்டனையைப் பெற்றே தீருவர், கடவுளை நம்பினேர் கைவிடப்படார் என்னும் உண்மைகளும் இப்படத்தில் நன்கு காட்டப் படுகின்றன. நல்லதங்காள் தனது குழந்தைகளைக் கிணற்றுட் போட்டுத் தானும் வீழ்ந்து மடியுங் காட்சி பார்ப்போர் எவரையும் உருகச் செய்யும் பான்மையது. சோகரசம் நிறைந்த இந்தப் படம் பொதுவாக எவராலும் சிறப்பாகப் பெண்களாலும் பார்த்து மகிழத் தக்கதாகும். இவ்வாரம் முழுவதும் இப்படம் இப்படக்காட்சி மண்டபத்திற் காட்டப்படும்.

## அரசாங்கசபைப் பொதுக்கணக்குக் கொமிற்றி

நியமன அங்கத்தினர் திரு ஜீ. ஏ. எச். வில்லியின் ராஜினமா காரணமாகப் பொதுக்கணக்குக் கொமிற்றியில் ஏற்பட்ட ஓர் இடத்திற்கு ருவான்வில் அங்கத்தினர் டக்றர் என். எம். பெரேரா நியமிக்கப்பட்டிருப்பதாகச் சென்ற புதன்கிழமை அரசாங்கசபையில் தலைவர் அறிவித்தார்.

## விவாகம்

### குலநாயகம் — சிவஞானம்

இந்த அக்டோபர்மீ 31உ ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் பண்டாரவளை குழுக்குத்தெருமேற்பார்வை உத்தியோகத்தராகிய திரு A. குலநாயக மவர்களுக்கும், மலாய்நாட்டில் கெமாபன் பகுதியில் என்ஜினியராகவிருந்த திரு. V. வைத்தியலிங்கமவர்களின் புத்திரி ஸ்ரீமதி சிவஞான அம்மாளுக்கும் விவாகம் மணமகளில்லத்திலே சிறப்பாக நிறைவேறியது; தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இனிது வாழ்வார்களாக.

## கந்தசஷ்டிவிரதகாலம்

இப்பொழுது நிகழ்வதாகிய கந்தசஷ்டி விரத புண்ணிய காலத்திலே இங்குள்ள சைவாலயங்களெவைகளிலும் விசேஷ அபிஷேகம் ஆராதனை நடப்பதோடு கந்தபுராணம் சூரபன்மன் வதைப்படலம், மயூரகிரிபுராணம், திருச்செந்தூர்ப் புராணம் என்னுமிவைகளும் சிரத்தையுடன் தலங்கள்தோறும் படனஞ்செய்யப்பட அன்பர்கள் நியதியோடு ஆலயஞ் சென்று கேட்டுப் பயனடைகின்ருர்கள். சூரசம்மார உற்சவமும் படிப்பும் நாளைத் தினம் நடைபெறும்.

## புகைரதப் புதிய ஒழுங்கின்படி

புகைரதப்பகுதியாரின் புதிய ஒழுங்கின்படி நேற்றுக் கொழும்பிலிருந்த புறப்பட்ட தபாற்புகைரதத் தொடர் இன்று அதிகாலை 5½ மணி வரையில் யாழ்ப்பாணப் புகைரதஸ்தானத்தில் வந்து சேர்ந்தது. இதனல் காகிதங்களும் பத்திரிகைகள் முதலியனவும் இவ்வண்ணுர்பண்ணைப் பகுதியிலுள்ளவர்கட்கு இன்று காலை 8 மணிக்கு முன் கிடைக்கலாயின. புதிய ஒழுங்கினுல் உண்டான வசதிகளுள் இதுவும் ஒரு பெரிய வசதியாதுமாம்.

வற்படுமாயின் ஒன்பதுதேச மகாநாட்டில் (ஜப்பான்) மீது தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்வதென முடிவு செய்யப்படலாம்.

# ஷான்ஸி தலைநகரின் வீழ்ச்சி சமீபிக்கிறது

## ஷாங்கையில் நடுநிலைமைப் பகுதி!

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தாரின் வேண்டுதல் பயன்ளித்தது

## துருப்புகள் வெளியேற்றம்

### நிராயுத பாணிகளான சினமக்கள் அடைக்கலம் புகுவதற்கு வசதி

ஷாங்கை நவம்பர் 4—

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தாரின் உத்தேசத்தின் பேற் பிரஞ்சுப் பகுதி ஓரமாக நாண்டோவின் வடக்குப் பிராந்தியத்தில் நிராயுத பாணிகளான சீன மக்கள் அடைக்கலம் புகுவதற்குச் சாத்தியமாகத் தற்காலிகமானவொரு நடுநிலைமைப் பகுதியை ஏற்படுத்துவதற்கு ஜப்பானியர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த எல்லைக்குட் சினத் துருப்புகள் எவரும் சரி நுழைய அனுமதிக்கப்படாதிருப்பதற்குப் பிரபல கேசு சபைக் குருவானவர் ஜெக்கி கோட் என்பவரும் அவரது சகாக்களும் உத்தரவாதமளித்திருக்கிறார்கள்.

குறிப்பிட்ட எல்லையிலிருந்து எல்லாத் துருப்புகளும் வெளியேறப்படும்வரை, இந்த நடுநிலைமைப் பகுதி ஏற்படுத்தும் வேலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

ஷாங்கை எல்லைப்புற ஓரமாயுள்ள சினத் துருப்புகளை விரட்டியடிக்கும் நோக்கத்துடன் ஆச்சங் கிரிக் நீரோடையின் தென்பாகத்தில் ஜப்பானியர் இப்பொழுது சிறிது சிறிதாகத் துருப்புகளைக் கரையில் இறக்கிய வண்ணமிருக்கின்றனர். இங்கு சினரின் எதிர்ப்பு மிகப் பலமாகவே இருந்து வருகிறது.

### ஹோ-யாங் நகர் வீழ்ச்சியடைந்தது

நாங்கிங் நவ 3

ஷான்ஸியின் நிலைமை இப்பொழுது அந்தரத்திலிருப்பதாகச் சீன அதிகாரிகள் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

ஜப்பானியர் ஹோ-யாங் நகரைக் கைப்பற்றிக் கொண்டதாகச் சொல்லிக் கொள்ளுகின்றனர். இது டையுயான்—பூவுக்குக் கிழக்கே 33 மைல்கள் தூரத்திலிருக்கிறது. மேலும் சின்-கௌ குன்றுகளையும் ஜப்பானியர் பிடித்துக் கொண்டனராம். இது டையுயன் பூவுக்கு வடமேற்கே 40 மைல்கள் தூரத்திலிருக்கிறது.

சடந்த இரண்டு வாரமாக நடந்த சண்டைகளின்போது இந்தக் குன்றுகள் பல தடவை கைமாறியதென்றும், இம்மலைக் கணவாய்கள் வீழ்ச்சியடைந்த பின், ஷான்ஸி மாகாணத்தின் தலை நகரான டையுயான் பூவைப் பாதுகாப்பது மிக்க கஷ்டமாக விருக்கிறதென்றும், சினரே ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

தெற்கு ஷான்ஸியிற் பாதுகாப்பு வரிசைகள் திருத்தியமைக்கப்பட்டிருப்பதாகவும், டையுயான்—பூ நகரிலிருந்து அவசரமானால் மக்களை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள்.

---

## மகாத்மா காந்தியின் தேக நிலைமை

### பகல் வேளையில் நல்ல நித்திரை டக்டர்கள் அறிக்கை

கல்கத்தா நவ 3

மகாத்மா காந்தியின் தேகநிலைமையைப் பற்றி டக்டர் சனில் சந்திர போஸ் இன்று மாலை கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டார்.

மகாத்மா பகல் வேளையில் சற்று நித்திரை செய்தார். நாள் முழுவதும் அவருக்கு நல்ல இளைப்பாறுதல் கிடைத்தது. பொதுவாக நல்ல அபிவிருத்தி ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. ஆனால் பூரண சுகமேற்படும் வரையில் அவர் சரீரத்திற்கும் மனத்துக்கும் ஓய்வு கொடுக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

---

## இந்திய மாதரின் கடமை

### காங்கிரஸை ஆதரிக்க வேண்டுகோள்

ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதியின் பிரசங்கம்

செல்லை நவ 3—

அகில இந்திய மாதர் சங்க வருடாந்த மகாநாட்டுக்கு ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மீபதி தலைமை வகித்துப் பேசுகையிற் குறிப்பிட்டதாவது:—

அகில இந்திய மாதர்மகாநாடு அரசியல் விஷயமாகக் கட்சிப் பிரதிகட்சிக்கு இடங் கொடுக்கக் கூடாதென்று எவ்வளவுதான் சொல்லப்பட்டபோதிலும், தேசிய உணர்ச்சியை அது மறக்க முடியா ஒரு சங்கம் என்ற முறையில் நாம் காங்கிரஸ் மந்திரி சபைகளை ஆதரிக்க வேண்டியது நமது கடமை, ஏனெனில், காங்கிரஸ் மட்டுமே இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான ஜனங்கள் சார்பாகப் பேசக்கூடிய ஓர் தேசிய ஸ்தாபனமாக இருக்கிறது. அது எப்பொழுதும் ஜனங்களுடைய நலவுரிமைக்காகவே உழைக்கும்.

---

## வங்காளத்திற் புரட்சிக் கூட்டம்

—0—

### ஸ்டேஷன் மாஸ்டரின் காரியாலயம் தகர்க்கப்பட்டது

கல்கத்தா நவ 4—

புரட்சி இயக்க நடவடிக்கைகள் மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்திருப்பதாகப் பரித்பூர் டிஸ்திரிக்கிலிருந்து கிடைத்திருக்கும் செய்திகள் கூறுகின்றன.

கிழக்கு வங்காள ரெயில்வேயிற் பாரித்பூர் செக்ஷனில் சிம்ராம்பூரைச் சேர்ந்த உதவி ஸ்டேசன் மாஸ்டரின் காரியாலயகளை "பாத்ஞர்லாக் வகுப்பைச் சேர்ந்த அநேக வாலிபர்கள் இடிசொன்று சுழற் துப்பாக்கியுடன் முற்றுகையிட்டனரென்று தெரிகிறது.

அந்தக் கட்டடத்திலிருந்தவர்கள் எதிர்த்ததாற் சிலர் காயமடைந்தனர். எனினும், முற்றுகையிட்டவர்கள் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தபின் தப்பி ஓடி விட்டனர்.

---

## திருவாங்கூர் மகாராஜாவின் ஜன்மதினம்

### ராஜாஜியின் அறிக்கை

திருவனந்தபுரம் அக் 31—

திருவாங்கூர் மகாராஜாவின் 26—வது ஜன்ம தினத்தை உத்தேசித்துச் சென்னை அரசாங்க முதன் மந்திரி கனம் ஸி. இராஜகோபாலாச்சாரியார் ஒரு அறிக்கையை விடுத்திருக்கிறார்:-

"இந்த இளம் அரசர் சரித்திரத்திற் சிறந்து விளங்கவல்ல ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார். பிறவி மதம் ஆகிய வித்தியாசமின்றி யாவரும் சமஸ்தானத்திலுள்ள கோயில்களுக்கும் புனித நதிகளுக்கும் இனிமேற் போகலாம்; ஹிந்து மதத்திற்கு இதுவரை களங்கமாக விருந்த ஒரு அம்சத்தை நீக்கிய பெருமை திருவாங்கூர் மகாராஜாவைச் சேர்ந்தது. இதற்காக அவரை நமது மதாசாரியர்களும் மதஸ்தாபகர்களும் ஆசீர்வதிப்பார்கள். தங்களுக்குச் சில அனுகூலங்கள் ஏற்படுவதுபற்றிச் சில ஜனங்கள் ஷெட்யூல் வகுப்புகள் என்ற கோஷ்டியில் தங்களைச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். திருவாங்கூருக்கு அதிக யாத்திரீகர்களை அனுப்புவதில் உற்சாகம் எடுத்துக் கொள்ளுபவர்கள் தீண்டாமை விலக்கிற்குப் பெரும் சேவை புரிவதுடன் திருவாங்கூருக்கு அப்பாலுமிருக்கும் ஆலயங்கள் திறக்கப்படுவதற்கு உதவுவார்கள்."

---

## சோனகதெருக் கொலைவழக்கு

### சுப்பிறீங்கோட்டுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது

(நமது நிருபர்)

சோனகதெருவில் வசிக்கும் அப்துல் றகிமான் என்பவன் உசன் நாச்சியாரைக் குத்திக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு சுப்பிறீங்கோட்டுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது.

---

## மறைந்த மனிதனின் பிரேதம்

### தெகிவளையில் ஒருதோட்டத்திற் கண்ட காட்சி

மூன்று தினங்களாகக் காணப்படாமலிருந்த ஜன் கோஸ்டா என்பவரின் பிரேதம் சென்ற வியாழக்கிழமை காலையில் தெஹிவளையைச் சேர்ந்த களுபோவிலையிலுள்ள பிராதிம்பராம கோட்டியிலுள்ள ஒரு தோட்டத்தில் ஆழமற்ற குழியிற் புதைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

அந்த ஸ்தலத்திலிருந்து துர்நாற்றம் வீசவே, அதைக் கவனித்தபொழுது ஒரு மனிதனின் அழுகின பிரேதம் கண்டு பிடிக்கப்பட்டது. துர்நாற்றத்தை முதலிற் கவனித்த காலஞ்சென்றவரின் மனைவி பிரேதத்தை அடையாளங் கண்டு பிடித்தாள். கோஸ்டா அவருடைய வீட்டு விறாந்தையில் தூங்குவது வழக்கமெனச் சொல்லப் படுகிறது. ஆகையால் கொலை நடந்திருக்கலாமென்று சந்தேகிக்கப் படுகிறது. விசாரணைகளும் நடந்து வருகின்றன.

---

## உலகத்திலேயே உயரமுள்ள நெட்டையர்

### இந்த நாகரீக உலகத்தில் கோலியாத்தைப் போன்ற நெட்டையர்களுக்கு அதிக இடமில்லை.

இந்த நெட்டையரின் உயரம் 9 அடி 8 அங்குலம். இவரின் பெயர் செய்யத் முகம்மது காலி என்பது. இவர் அலெக்ஸாந்திரா வாசியாகும். எகிப்திய மன்னர் பாரூக் இந்த நெட்டையருக்கு அவரது பாக்கி ஜீவிய காலம் முடியும்வரை படிக்கை வசதி செய்து கொடுத்திருக்கிறார். செய்யத் இன்னும் வளருகிறார்.

---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1898 ம் ஆண்டின் 8 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு பெ. அரு மு. சி. முத்துச்சாமி செட்டியார் தன் பிறதர் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:

| நம் | திகதி | ரூபா | சத. | ஊர் பெயர் நகைகளின் விபரம் |
|---|---|---|---|---|
| 1936 ம் ஆண்டு மே மாதம் | | | | |
| 38 | 6 | 9 | | கிராவியடி வ. கணபதிப்பிள்ளை கல்தோடு சோடி 1 |
| 43 | 6 | 4 | | நயினார்தீவு வே. கர்தையா வெள்ளைக்கல் 2 வைத்த காதக் குச்சி சோடி 1 |
| 74 | 8 | 200 | | சங்கானை சு. பொன்னம்பலம் குண்டு 2ம் கப்பி 2 ம் கோத்த தாலிச் சங்கிலிக்கொடி 1 |
| 153 | 12 | 7 | | மாதகல் க. வீரசிங்கம் கல்மோதிரம் 1 |
| 261 | 17 | 12 | | ஆரியர்மடம் கா முருகேசு தாலி 1 |
| 271 | 18 | 10 | | வண்கிழக்கு நா. தங்கராசா வெள்ளைக்கல் மோதிரம் 1 |
| 293 | 19 | 18 | | நவாலி க. கந்தையா குண்டுவைத்த அரைப்பவுண் 1 |
| 327 | 21 | 8 | | கோண்டாவில் க. வேலன் பின் முகப்பு 1 |
| 367 | 23 | 45 | | நல்லூர் கா. முத்துத்தம்பி அரைப்பவுண் 2 ம் ஆடுதன் பொட்டு (க) கோத்த சங்கிலி 1 |
| 399 | 24 | 15 | | கொக்குவில் கா. சின்னத்துரை பின் கொக்கி 1 |
| 494 | 29 | 46 | | மானிப்பாய் செ. கந்தசாமி வளையல்காப்பு சோடி 1 |
| 539 | 31 | 95 | | சோனகதெரு மொ. முகம்மது கல்வைத்த முழுடலர் 1 |
| ஜூன் மாதம் | | | | |
| 574 | 1 | 80 | | கந்தர்மடம் து. மாணிக்கம் வெள்ளைக்கல் பெண்டனுடன் சங்கிலி அட்டியல் 1 |
| 580 | 1 | 12 | | நல்லூர் ஆ. பொன்னையா கல்தோடு சோடி 1 |
| 597 | 2 | 115 | | கோண்டாவில் ச. பொன்னுத்துரை கெட்டிக்கொலுசு 1ம் குண்டுச் சங்கிலி 1 |
| 709 | 8 | 5 | | கொக்குவில் அ. தம்பையா காட்டுக்கடுக்கன்சோடி 1 |
| 752 | 10 | 55 | | வண்கிழக்கு பா. ஜே. சுந்தரம் அரைப்பவுண் 1 கோத்த குண்டுச் சங்கிலி 1 |
| 776 | 11 | 10 | | புத்தூர் க. தில்லைநாதர் மணி 35 |
| 796 | 12 | 18 | | திருநெல்வேலி சி. இராமுப்பிள்ளை பச்சை வெள்ளை கட்டிய புரோச் 1 |
| 931 | 19 | 90 | | அராலி க. துரைரெத்தினம் மழுக்கன் சிகப்புக்கல் பதக்கத்துடன் முருச்சுக்குத்தி அட்டியல் 1 |
| 978 | 21 | 25 | | சண்டிக்குளி வ. மிஸ் ஆசிர்வாதம் கல் கவுத்தோர் 1 |
| 1078 | 26 | 105 | | வண்மேற்கு கா. மகாலிங்கம் குண்டுச்சங்கிலி 1 |
| 1087 | 27 | 23 | | கொக்குவில் க. காத்தி தாலி 1ம் குண்டு 6 ம் சிமிக்கி வாளி சோடி 1 |
| 1103 | 28 | 10 | | சிறும்பியடி அ. சுப்பையா தேவர் கல் காதோலை சோடி 1 |
| 1112 | 29 | 10 | | மாகியப் பிட்டி ச. நல்லதம்பி கல் தோடு சோடி 1 ம் சிமிக்கி வாளி சோடி 1 |
| 1157 | 30 | 45 | | வண்மேற்கு க. செல்லத்துரை குண்டுகளுடன் தாலி சாட்டுக் கொடி 1 |
| ஜூலை மாதம் | | | | |
| 1211 | 4 | 80 | | வெள்ளாந்தெரு பொ. சபாரெத்தினம் கல்பதக்கத்துடன் முருச்சுக் குத்தி அட்டியல் 1 |
| 1359 | 11 | 100 | | தாவடி சு. நடராசா கல் பதக்கத்துடன் முருச்சுக்குத்தி அட்டியல் 1 |
| 1448 | 16 | 8 | | வண்மேற்கு கு. பொன்னம்பலம் தாலி 1 |
| 1449 | 16 | 6 | | சண்டிலிப்பாய் நா. சின்னத்தம்பி சிமிக்கி வாளி சோடி 1 |
| 1453 | 16 | 170 | | கோண்டாவில் ச. பொன்னுத்துரை கல்பதக்கத்துடன் கெட்டிப் பூரான் அட்டியல் 1 |
| 1454 | 16 | 18 | | கோண்டாவில் ஆ. பொன்னையா கல் டிம்பி பதக்கம் 1 |
| 1473 | 19 | 20 | | புத்தூர் வ. ஐயாத்துரை சிகப்புக்கல் தோடு சோடி 1 |
| 1545 | 22 | 40 | | சேணியதெரு க. கனகசபை அரைப்பவுண் 1 கோத்த குண்டுச் சங்கிலி 1 |
| 1592 | 24 | 15 | | அராலி ச. துரைரெத்தினம் கல் வைத்த அச்சரக்கூடு 1 |
| 1597 | 25 | 8 | | மாகியப்பிட்டி ச. நல்லதம்பி சிமிக்கிவாளி சோடி 1 ம் காட்டுக் கடுக்கன் சோடி 1 |
| 1605 | 25 | 180 | | வண்மேற்கு கா. மகாலிங்கம் கல் பெண்டன் (2) உடன் சங்கிலி 2 |
| 1649 | 27 | 30 | | கோப்பாய் கா. அருணாசலம் கல் டிம்பி பதக்கம் 1ம் மோதிரம் 1 ம் தடை மோதிரம் 1 |
| 1653 | 27 | 115 | | நல்லூர் பொ. தியாகராசா சங்கிலி 1 |
| 1654 | 27 | 20 | | கன்னியங்காடு சி. அழகரெத்தினம் கல்வைத்தமோதிரம் 1 |
| 1656 | 27 | 8 | | சிவன்கோவிலடி க. முத்தையா கல்தோடு சோடி 1 |
| 1711 | 31 | 7 | | வண்மேற்கு த. செல்லத்துரை ஆடுதன் மோதிரம் 1 |
| 1715 | 31 | 61 | | உடுவில் நா. பராசசிங்கம் செடிவேலைசெய்த அரைடலர் 1 |
| ஆகஸ்டு மாசம் | | | | |
| 1736 | 1 | 10 | | ஆனைப்பந்தியடி சி. திருநாவுக்கரசு கல்தோடு சோடி 1 |
| 1779 | 4 | 110 | | ஆரியர் குளம் சி. சுப்பிரமணியம் கல் மாலைப்பதக்கம் 1 |
| 1794 | 5 | 100 | | சங்கானை கிழக்கு செ. இராமலிங்கம் கல் பதக்கத்துடன் முருச்சுக்குத்தி அட்டியல் 1 |
| 1799 | 5 | 35 | | கைதடி க. வேலுப்பிள்ளை இனாவர் மோதிரம் 1 |
| 1811 | 5 | 250 | | கீராவியடி மு. க. சுப்பிரமணியம் மினுகுகாப்பு 2ம் அச்சுக்காப்பு 2 ம் அச்சரக்கூடு 1 கோத்த சங்கிலி 1 ம் வெள்ளைக்கல் பெண்டனுடன் குண்டுச் சங்கிலி 1 |
| 1855 | 9 | 13 | | நீர்வேலி வ. அம்பலவாணர் கல்தோடு சோடி 1 |
| 1881 | 11 | 9 | | நவாலி ச. பொன்னுத்துரை சிகில்மோதிரம் 1 |
| 1886 | 11 | 13 | | ஆரியர்மடம் மு. செ. பொன்னம்பலம் இனாவர் மோதிரம் 1 |
| 1896 | 12 | 80 | | கன்னாதிட்டி வ. சின்னத்தம்பி கல் பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் 1 ம் குண்டுவைத்த அரைப்பவுண் 2 ம் ஆடுதன் மோதிரம் 1 |
| 1925 | 13 | 30 | | வண்கிழக்கு வ. மாணிக்கம் குண்டுவைத்த கால் டலர் 1 |
| 1934 | 14 | 39 | | நல்லூர் சி. அப்புத்துரை பெண்டன் ஓம்சம் 1 |
| 1952 | 16 | 38 | | ஆரியர்குளம் பொ. கந்தையா பின்னைக்காப்பு சோடி 1ம் கல் கவுத்தோர் 1 |
| 1953 | 16 | 35 | | ஆரியகுளம் பொ. கந்தையா கல் பதக்கம் 1 ம் டை கல் மோதிரம் 1 ம் நீலக்கல் 1 வைத்த பெண்டன் 1 |
| 1997 | 18 | 85 | | கீராவியடி பொ. பராசசிங்கம் முத்துப்பச்சை சிகப்புக் கட்டிய பதக்கம் 1 |
| 2015 | 18 | 11 | | வண்கிழக்கு சி. அருணாசலம் அச்சு கம்பிக்காப்பு 1 |
| 2058 | 21 | 20 | | சேணியதெரு க. கனகசபை வெள்ளைக்கல் புரோச்சு 1 |
| 2066 | 21 | 25 | | ஊர்காவற்றுறை ஆ. சிதம்பரப்பிள்ளை கல் 2 வைத்த மோதிரம் 1ம் விலாசம்போட்ட மோதிரம் 1 |
| 2080 | 22 | 77 | 50 | கொக்குவில் கிழக்கு அம்பத்தோலை க. காத்தி கல் டிம்பியுடன் முருச்சுக்குத்தி அட்டியல் 1 |
| 2104 | 22 | 2 | 50 | சுதுமலை சு. சதாசிவம் வெள்ளைக்கல் 2 வைத்தகாதுக்குச்சிசோடி 1 |
| 2157 | 25 | 11 | | வேலணைகிழக்கு க. கந்தர் கல்தோடு சோடி 1 |
| 2165 | 26 | 18 | | ஓட்டுமடம் ப. நடராசா காட்டுக்கடுக்கன் சோடி 1 |
| 2168 | 26 | 50 | | ஆனைப்பந்தியடி நா. மயில்வாகனம் கல் பெண்டன் 1 |
| 2197 | 27 | 15 | | சேணியதெரு க. கனகசபை ஆடுதன்மோதிரம் 1 |

விற்பனவு நிகழும் ஈசுவர௵ கார்த்திகைமாசம் 7 ந் திகதிக்குச் சரியான (22-11-37) திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் எடுபட்டநகை பிறகில்லாத மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்தீஸ் மேஸ்தர்.

(Mis. 161, 8 & 11-11-37.)

## பாலருவக்கப் பயிற்று மாசிரியர்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

ளவும் ஈவிரக்க மில்லா உள்ளத்தோடு கடுமொழி உரைத்து, இளஞ் சிறுரைத் துன்புறுத்தி நல்வழிப்படுத்த எடுக்கும் முயற்சியானது "கனியிருப்பக் காய்கவர்ந்தது போலவும்" பசுவின் மடியறுத்துப் பால்கொள்ளும் பான்மைபோலவு மாகுமென்பதற்கையமின்று.

ஆகவே செம்மையுரியசச் சிறுவரைப் பயிற்று மாசிரியர், தருதோற்றம், இராஞானக்கல்வி, தண்முகம், இன்சொல், தயைசாட்சணியம் முதலான ஆபரணங்களை அணிந்துகொண்டவரா யிருப்பின், அன்னுரைப் போல் உத்தம ஆசிரியர் இல்லையென்றே துணிந்து சொல்லலாம்.

—வி. ச. ப

## பாம்புக்குப் பலியான சிறுவன்

### மூதாதை என்று விட்டில் பாம்பை வளர்த்த விநோதம்

மாத்தறை நவ 2—

மூலதியானு கிராமத்தில் ஒருவர் ஒரு நாகபாம்பு தன்னுடைய மூதாதை யென்று நம்பி வீட்டில்வளர்த்து வந்தார். அது வீட்டில் அங்குமிங்கும் சாதாரணமாகப் போய்க் கொண்டிருக்கும். அந்தக் கிராமவாசியின் 7 வயதுள்ள சிறுவன் ஓடியாடிக் கொண்டிருக்கும் பொழுது பாம்பின் மீது மிதித்து விட்டான். அது உடனே அவனைக் கடித்து விட்டது. திறமையான சிகிச்சையளித்தும் பயனின்றிச்சிறுவன்மரணமடைந்தான்.

## ஆஸ்திரேலியாவில் இலங்கைப் பழங்கள்

### ஏற்றுமதிக்குக் கப்பல்களிற் போதிய வசதி செய்ய வேண்டுகோள்

தாழ்ந்த நில விளைபொருட்கள் சங்கத்தின் உதவித் தலைவர் திரு. வேஸ். டி. நீஸ் அவர்களின் தலைமையில் ஒரு தூதுக்கோஷ்டி செவ்வாய்க்கிழமை பின்னேரம் பழ அபிவிருத்திக் கொம்மிற்றியைக் கண்டு பேசிச் சிறந்த ஒழுங்குள்ள முறைகளிற் பழம் உண்டு பண்ணுந் தொழிலை நடத்தி ஊக்கமளிப்பதற்குப் பல துறைகளிலும் நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்திக் கூறிற்று.

இந்தக் கோஷ்டியின் அங்கத்தவர்கள் திருவாளர்கள் எல். டபிள்யு. ஏ. சொய்சா, எஸ். ஓ. கிரிமானி, கேயில். ஹேவிதாரணே, ஏ. எம். கிளபன் டயஸ் முக்கியமாக இலங்கை வாழைப்பழங்களை ஆஸ்திரேலியாவிற்கு ஏற்றுமதி வியாபாரஞ் செய்வதில் அபிவிருத்தி செய்வதற்கு இடம் இருக்கிறதென்றும் இது சம்பந்தமாகப் பழ அபிவிருத்திக் கொம்மிற்றியார் ஆஸ்திரேலியாவிற்கு வாழைப்பழம் ஏற்றுமதி செய்வதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கும்படி கப்பல் ஏஜெண்டுகளுடன் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்றுக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

## தற்காலிக போக்குவரத்து மந்திரி

### தேர்தல் நவம்பர் 15 ம் திகதி நடைபெறுமாம்

ஓர் விடுமுறையின்மீது ஐரோப்பாவுக்குச் செல்லும் திரு. ஜே. எல். கொத்தலாவல இல்லாத சமயத்தில் தலைவராக வேலைபார்க்கும்படியாகத் தனது அங்கத்தினர்களில் ஒருவரைத் தேர்ந் தெடுக்கும் படியாகப் போக்குவரத்து நிர்வாகக் கொம்மிற்றியானது இம்மாதம் 15ந் திகதி காலையிற் கூடுமெனத் தெரிகிறது.

இம் மாதம் 15 ந் திகதிக்கு முந்தின மாலை எம். எம். பெஸிக்ஸ் ரூஸஸ் என்ற கப்பல் மூலமாகத் திரு கொத்தலாவல இலங்கையை விட்டுப் புறப்படுவார்.


# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil**

# நேத்திரானந்ததைலம்

## இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவே முதல்தரம்

**6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50**

**தபாற் கூலி 45 சதம்**

இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஜர்து நிவிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதை படர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி, தலைமயிரை நீளமாய் வளரச் செய்து பளபளப்பையுங் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடிபோடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயதுவித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகிய பெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள். வெளிவந்திருக்கும் ஏனைய போலித் தைலங்களைப் போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்து கோள்வதும், மாதர் அதிகமாகவிரும்புவதும் 35 வருடங்களாக எவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்,

## இந்த நேத்திரானந்த தைலமே

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்டபெயர் உண்டு என்று வளர்ந்து திரிகிற ஒவ்வொரு சிறு பிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலைமயக்கம், கண் எரிவு, தலைவலி, இளநரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதஞ் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினுல் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்திற் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல. இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப் பட்டுள்ளது.

### ஓர் உலக அதிசயம்

1937 ம் ஆண்டு ஜூன் மீ 4 ந் திகதி எழுதிய கடிதத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. T. C. செல்லையாபிள்ளை பின்வருமாறு எழுதுகின்றார்:—

"உங்கள் நேத்திரானந்த தைலம் அற்புதமான பலனைத் தருகின்றது. தற்போது விலைப்படுந் தைலங்கள் எல்லாவற்றுள்ளும் இதுவே சிறந்ததென்பது அங்கீகரிக்கப்பட்டதொன்று" 12-6-37 இல் சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகசுவாமி பின்வருமாறு எழுதியுள்ளார்:- "உலகப் பிரசித்தி பெற்ற உங்கள் நேத்திரானந்த தைலம் எனக்கு மிகப் பெரிய நன்மையைச் செய்திருக்கிறது" போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்றன்விலை ரூபா 2-50 வேத முதலியார் - பாணந்துறை

### நேத்திரநோய்களுக் கிதினும்சிறந்தது வேறுகிடையாது

ஹெலியலாவிலுள்ள டன்ஸ்லண்ட் தோட்டச் சுப்பிரிண்டெண்ட் மிஸ்டர் G. ஜேபேட்ஸ் எழுதுவதாவது:-

"சிலகாலமாக நான் உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தை உபயோகித்தேன். தலைக்கு அது மிகச் சிறந்த எண்ணெயாகும். உங்கள் தைலத்தால் நான் மிகப் பெரிய நன்மையை அடைந்துள்ளேன். போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா 2-50 வி. பி. மூலம் அனுப்புவதாயின் ரூபா. 2-95.

### கண் தொந்தரவு தீர்க்கமாக மாறியது

மாத்தளை, 'அபயக்கோன் வளவை'ச் சேர்ந்த திரு. C. D. F. அபயக்கோன் பின்வருமாறு எழுதுகின்றார்:-

அதிகமாக வாசித்ததால் எனக்கு ஏற்பட்டிருந்த கண்தொந்தரவை உங்கள் நேத்திரானந்த தைலம் தீர்க்கமாக மாற்றியது. நான் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்ததைக் காட்டிலும் மிக அதிகமான பலனை அது அளித்தது." ஆறு அவுன்ஸ் நிறையுள்ள போத்தல் ஒன்றின் விலை ரூபா 2-50. W. டேனியல் பெர்ணண்டோ வைத்திய சேகர, வேத முதலியார், பாணந்துறை, B. T. S. தலைமைக்காரியாலயம், நொறிஸ் ரோட், கொழும்பு; காஸில் ஹோற்றல், கண்டி.

### நேத்திரானந்த தைலம்

இலங்கையின் முதலாவது நோய் தீர்க்கும் மருத்துவ எண்ணெய் பெண்களால்விரும்பிவாங்கப்படுவது ஆண்களால் நிச்சயமாகத் தேர்ந்தெடுபடுவது பரம்பரைத் தலையிடி நோய்க்கும் ஜலதோஷம் அல்லது கபத்துக்கும் பல்வேறு நேத்திர நோய்களுக்கும் விசேஷமானது.

கேளாமலிருக்கவே அனுப்பப்பெற்ற தாரதரப் பத்திரங்கள்

திரு. P. S. இளையதம்பி, கலுப்பஹாவி தோட்டம், எழுதுவதாவது:-

"உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தின் பலன் மிகச் சிறந்தது என்று மிகச் சந்தோஷத்தோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்."

திரு. M. L. ஜயசிங்கி, எல்டெப் தோட்டம், எழுதுவதாவது:-

மிக உக்கிரமான தலையிடி ஏற்பட்டபோது உங்கள் தைலத்தை உபயோகித்தேன். நான் அடைந்த அற்புதமான சுகத்திற்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். இதனை எனது நண்பரொருவர்க்கும் சிபார்சு செய்தேன். அவரது தலையிலும் கண்ணிலும் ஏற்பட்டிருந்த நோய்களை அது நீக்கிற்று."

திரு. K. A. D. அமரசேகரிஸ், உடன் சொல்லுவதாவது:-

"நான்கு போத்தல்களை உபயோகித்தபின், நான் புத்தம் புதிய மனிதனைப் போலக் காணப்படுகின்றேன். இரவில் நல்ல நித்திரை வருகின்றது. தேகத்தைப் பொதுவாக நன்கு தயாரிக்கின்றது. ஆயின் இதை உபயோகிப்பதற்கு முன்னரோ அதிகாலை 2 அல்லது மூன்று மணிக்குமுன் நான் நித்திரை பெறுவதே துர்ப்பலமாயிருந்தது."

திரு. P. E. பெர்ணண்டோ, வியங்கவெலாத் தோட்டம்:- "தலை, நாசி, காது சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது மிகச் சிறந்த தைலமாகும்"

திரு. எம். ஏ. செல்லையா, ஆசிரியர் மானிப்பாய்:- "தலை கண் சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது தக்க பலனை யளிக்க நான் கண்டேன்."

மிஸ். B பர்ச், பொலிஸ் பங்களோ, வாக்கப் பொலா:- "உங்கள் எண்ணெய் ஒரு பெரியவரமாகும். அது இல்லாமல் இருக்க முடியாது." போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா. 2-50 W. டேனியல் பெர்ணண்டோ வைத்தியசேகர, வேதமுதலியார் பாணந்துறை,பௌத்தமந்திரய,நொறிஸ்ரோட்,கொழும்பு; காஸில்ஹோற்றல்,கண்டி.

### நேத்திரானந்த தைலத்தின் மூலம் தமது வேலையைக் காப்பாற்றிக் கொண்ட கனவான்

சிங்கப்பூரிலிருந்து அனுப்பப்பெற்ற தாரதரப் பத்திரம்

1937 ம் ஆண்டு ஜூன் மீ 18 ந் உ, பினுங்கில் நடைபெறும் "மலாயாட் சிபூனல்" என்னும் பத்திரிகையில் ஆசிரியர் குழாத்தில் ஒருவராகக் கடமை பார்க்கும் திரு. T. கோப் எழுதுவதாவது:- சமீபத்தில் இலங்கையிலுள்ள எனது நண்பரொருவர் உங்கள் நேத்திரானந்த தைலத்தில் ஒரு போத்தலை எனக்கு அனுப்பி வைத்தார். சில காலமாக நான் கண்ணிலுள்ள நோயினுல் நான் பெரிதும் வருந்தினேன். இதனுல் எனது பத்திரிகை வேலையை விட்டுவிடும்படி கூறிச் சில கண் வைத்திய நிபுணர்கள் தெரிவித்தார்கள் ...... உங்கள் முதற் போத்தலே எனக்கு நன்மை விளைத்திருக்கின்றது என்பதில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதில் இன்னுஞ் சில போத்தல்கள் வேண்டும்......தயவு செய்து C. O. D. போஸ்ற்மூலம் இன்னும் இரண்டு போத்தல்கள் அனுப்பி வையுங்கள்." வேண்டுவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதவும்:- வேத முதலியார் W. டேனியல் பெர்ணண்டோ வைத்திய சேகரா. "ஸ்ரீவேதவளவு" பாணந்துறை, நொறிஸ்ரோட், புறக்கோட்டை.

| **தலைமை ஸ்தானம்:** | **கிளைஸ்தானம்:** |
|---|---|
| வைத்தியசேகரா முதலியார், | பௌத்த மந்திர வைத்தியசாலை |
| டப்ளியு. டானியல் பேர்ணண்டோ, | நோரிஸ் ரோட், கொழும்பு-இலங்கை |
| ஸ்ரீ வேதவளவும், பாணந்துறை. | காஸில் ஹோட்டல், கண்டி. |

**தந்தி விலாசம்:- வேதமுதலியார், பாணந்துறை**


Y 70.1-7-7-37 to 30-6-38



## நீங்கள் ஒரு சிறு காரை வாங்கும்போது பின்வரும் குறிப்புக்களை அவதானியுங்கள்

# ஆஸ்ரின் செவினில்

1. 4 ஸ்பீட் கியர் பொக்ஸும் 3 ஸ்பீட்ஸ் சிங்கிரமேஷும் உண்டு.
2. ஸ்பேயர்வீலும் லக்கேஜ் கரியரும் உண்டு.
3. அபாயமின்றிக் காரைச் செலுத்தக் கூடிய விதமாகத் தானுக இயங்கும் டிரேன் டிரெக்ஷன் இண்டிக்கேட்டர்ஸ் உண்டு.
4. குரோமியம் பிளேட்டுள்ள டி-அன் சுவிச்ஹெட்லாம்ஸும் ஸ்டொப் லைட்டும் உண்டு.
5. ஒளிபொருந்திய இன்ஸ்ட்ருமென்ட் பேனல் உண்டு.
6. கீழ்த்தரை லெவல் உண்டு.
7. செலவுச் சுருக்கத்திற்கேற்ற பாரக்குறைவு உண்டு.



**உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றட் கொழும்பு.**

யாழ்ப்பாணத்திற்கும்,

திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னர், அநுராதபுரம் ஆதிய இடங்களுக்கும் சோல் ஏஜெண்ட்ஸ்

**வி. செல்வத்துரை & சன்ஸ்**

அதிகாரம் பெற்ற ஏஜன்ஸ்

ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம்.

Y 137. 19.8-37.— 18-8-38 (தி)



# N. வைத்திலிங்கம் & கம்பெனி

**பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.**

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo

**Telephone No. 30.**

(Y 65 1-3-37—31-3-38) தி



# S. S. C. இலக்கியக்குறிப்பு(1938)

**2-ம் பதிப்பு.**

விரைவில் வெளிவரும்! எதிர்பாருங்கள்!

இந்த இலக்கியத்திரட்டு 2-ம் பாகத்திற்கும், கட்டுரை மலர் மாலைக்கும் வித்துவான், திரு, ந.சுப்பையபிள்ளையவர்களால் எழுதப்பட்ட உரைநூலாகும். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிரேஷ்ட பாடசாலை விடுகைத் தாரதரப் பத்திரப் பரீக்ஷைக்குப் பயிலும் பரீக்ஷார்த்திகட்கு மிகவும் உபயோகமானது முதலாம் பதிப்பிற் சுருக்கநோக்கி விடப்பட்டனவும்இன்றியமையாதனவுமாகிய பல அரிய விஷயங்கள் இப்பதிப்பிற் புதியனவாக ஆங்காங்குச் சேர்க்கப் பட்டுள்ளன.

**பிரபல புத்தகசாலைகளிற் பெறலாம்.**

(Mis 145 17-10-37 to 13-11-37)

## செய்கருமம் யாவும் விருத்திக்கும்படி யான் முருகப்பிரானைப் பிரார்த்திக்கின்றேன்


*முருகப்பிரான்மீது முதிர்ந்த பக்தி யுடையவர்களே!*

வருஷந்தோறும் கதிர்காம யாத்திரைக்குப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். அவர்களுள் ஆயிரக்கணக்கானோர் இதுவரையும் மறைந்துபோயிருந்து இப்பொழுது என்னால் திருத்தப்பட்ட பாதை வழியாகக் கதிரமலையைத் தரிசிக்க வருகிறார்கள். இவ்வாயிரக்கணக்கான யாத்திரைவாசிகளுக்குத் தாகத்தினலுண்டாகும் அவஸ்தையைத் தீர்ப்பதற்கு இதுகாறும் மாணிக்ககங்கையிலிருந்து ஒரு தரம் தண்ணீர் 40 சதவீதம், ஆயிரக்கணக்கான தகரம் தண்ணீர் எடுப்பித்து விவேகானந்த மடத்தில் கொடுத்து வருகிறேன். இத் தருமகைங்கரியம் எனக்குப் பின்பும் நடக்க வேண்டுமென்னும் அவா மேலீட்டினால் யான் யாசித்து வைத்திருந்த பணத்தைக்கொண்டு தண்ணீர்ப் பந்தலுக்குச் சமீபத்தில் தெருவுக்கருகில் 75 அடி சதுரமும் 20 அடி ஆழமுமுள்ள ஓர் திருக்குளத்தை வெட்டத் தொடங்கி, கால்வாசி முடிந்ததும் மிகுதி வேலையை முடிப்பதற்கு இன்னும் 1500 ரூபா தேவைப்பட்டமையினால் வேலையை நிற்பாட்டி விட்டேன். தற்போது யாழ்ப்பாணநாட்டில் சேர்ந்த 232 ரூபா 62 சதத்தைக்கொண்டு திருக்குளவேலையை இந்த ஐப்பசிமாதம் மீண்டும் ஆரம்பிக்கப் போகிறேன். இவ்வாயிரத்தைஞ்ஞூறு ரூபாவையும் நீங்கள் எல்லோரும் இந்த ஐப்பசிமாதம் முடிய முன்னர் எனக்கு அனுப்பினால் வருகிற ஆடி உற்சவத்திற்கு வரும் யாத்திரைவாசிகள் அனைவரும் இத்திருக்குளத்தில் தாக சாந்தி செய்வார்கள். மரண அவஸ்தையிலும் தேவைப்படுவது தாகசாந்தி. இத்தகைய தாகசாந்தித் திருத்தொண்டிற்குப் பணம் உதவி புரியும் புண்ணியமானது தம்மைமட்டுமன்றித் தமது சந்ததியாரையும் பற்றித்தொடரும்.

*பணம் அனுப்புவோர் போஸ்டல் ஆர்டர் அல்லது மனியார்டர் மூலமாக அடியிற்காணும் விலாசத்துக்கு அனுப்புவதோடு தங்கள் தங்கள் விலாசத்தையும் விபரமாக அனுப்பும்படி வேண்டுகிறேன்.*

*ரமண - சங்குசாது,*
கதிரமலை, கிசமாரும போஸ்டு.

Mis 152. 22-10-37 to 21-11-37)




Y 63. 1-1-37to31-12-37.

### விளம்பரம்

கந்தசஷ்டிக் காலங்களிற் சைவாலயங்களில் முறைப்படி படனஞ் செய்யப் பெறுவதும் "திருச்செந்தூர்ப் புராணம்" என்னும் திவ்விய புராணம் (உரையுடன்) நமது சைவப்பிரகாச யந்திரசாலையில் விற்பனைக்கிருக்கின்றது. வேண்டுவோர் வி. பி. மூலமாகவேனும் நேரிலேனும் பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம், மானேஜர்.

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்லிலி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை நாகப்பூ, லங்கபஸ்பம், அரக் பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயக்காந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்த பாண்டு, பீனிசம், கைகால் சரந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற் சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவுபிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை.
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதா வைத்தியசாலை
வீட்டு இலக்கம் 33
பழைய வாடி றோட்டு
கோட்டமுனை
மட்டக்களப்பு, சிலோன்.


(Y 64. 1-1-37 to 31-12-37.)

# கேரள சந்தன சோப்

அழகான மாதர்களுக்கேற்றது,

சருமத்திற்கு அழகையும் ஆரோக்கியத்தையும் அளிக்கவல்லது





எல்லா இடங்களிலும் கிடைக்கும்

ஏஜன்ட்ஸ்:—

**தேவார் அன்கோ,**
57 மெயின் ஸ்ட்றீட்,
கொழும்பு.

*யாழ்ப்பாணத்தில் இது பெறக்கூடிய இடங்கள்*

N. M. S. சுல்தான் மோகிதீன் பிரதர்ஸ், பெரியகடை, யாழ்ப்பாணம்
மெடிக்கல்ஹால், பெரியகடை. யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்அப்போதிக்கரிஸ்கம்பனிமெயின்ஸ்ட்ரீட்,யாழ்ப்பாணம்

(Mis. 156. 10-9-37—தி

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,367 00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விதகி வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12, மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 5 விகிதமாகக் கொடுக்கப்படும். உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக் கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக் கொண்டு பிணையுடன் கடன் எடுக்கலாம். (இந்தக்கடனையும்) பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்து கொள்ளலாம்.

சி. செல்லப்பா
மானேஜர்.

Y 225. 21-11-36—20-11-37 (இ)

*யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனி னிலன்*



# கந்தரடைன்

கூந்தலை வளர்க்கும் எண்ணெய்

கூந்தலை அழகுபடுத்திக் கொள்வதற்கு மிகச் சிறந்தது

[வழுக்கை, இளவயதிலுண்டாகும் நரை, கூந்தல் கொட்டுண்ணுதல், தலையில் அசடுகள் உண்டாகுதல்] முதலியவைகள் வாரமல் தடுப்பதற்குக் கைகண்ட வாசனை எண்ணெய்.

கல்கத்தா: **பெங்கால் கெமிக்கல்:** பம்பாய்

ஏஜெண்டுகள்:—
தேவார் அண்டு கோ,
57 மெயின் ஸ்ட்ரீட் கொழும்பு.

(Mis. 156. [illegible] - 7)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residinag at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakas. Press, Vannarponnai, Jaffna on Monday, November 8th 1937.